24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 127 பங்குனி 20ஆம் நாள் புதன்கிழமை 03 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

கூட்டமைப்பின் ஆதரவுடன் பாதீடு நிறைவேற்றப்படும்

முடிந்தால் தோற்கடியுங்கள் என மகிந்த அணிக்கு ரணில் அரசு சவால்

கொழும்பு, ஏப்ரல் 3

ஐக்கிய தேசிய முன்னணி அரசை எவராலும் வீழ்த்தவே முடியாது. எம்மை வீழ்த்த வகுக்கப்படும் சதி முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்கா. பாதீட்டுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு தரும். இயலுமானால் பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பைத் தோற்கடியுங்கள் என்று நாம் மகிந்த அணியினருக்குப் பகிரங்கமாகச் சவால் விடுகின்றோம்.

>> 21

வவுனியாவை மிரட்டும் எலிக் காய்ச்சல் தொற்று

அவதானமாக இருக்குமாறு மக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, ஏப்.3

வவுனியாவில் கடந்த மூன்று மாதங்களில் எலிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான 31 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டன என்று

>> 21

வவுனியாவில் வாள்வெட்டு: இளைஞர் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஏப்.3

வவுனியா, நெளுக்குளத்தில் நேற்று அதிகாலை வாள் வெட்டுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்தவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம், தட்டாங்குளத்தைச் சேர்ந்த நவசுதர்சன்

>> 21

7 வகை விதி மீறல்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம்!

கொழும்பு, ஏப். 3

7 வகையான போக்குவரத்து விதி மீறல்களுக்குக் குறைந்தபட்ச தண்டத் தொகையாக 25 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான அரசிதழும் வெளியிடப்பட்டுள்ளது.

தொடருந்துப் பாதையில் பாதுகாப்பின்றி வாகனத்தைச் செலுத்துதல் புதிய போக்குவரத்துக் குற்றமாகவும் அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடருந்துப் பாதையினுள் பாதுகாப்பின்றி

>> 21

கூட்டமைப்பைச் சந்திக்க நேரம் ஒதுக்காத மைத்திரி

கொழும்பு, ஏப்.3

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று அனுமதி கோரியிருந்தபோதும், அவர்களைச் சந்திப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேரம் ஒதுக்கவில்லை. அதை

>> 21

வேலை வாய்ப்பு ஆசைகாட்டி நிதி மோசடி எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.3

வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்று கூறிப் பல லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பெருங்குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுப் பிற்பகல் ஒருவர் கைது

>> 21

4 நைஜீரியர்கள் உட்பட 6 பேர் கடலில் சிக்கினர்

இந்தியா தப்பிச் செல்ல முயற்சி என்று சந்தேகம்

கொழும்பு, ஏப்.3

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குச் செல்ல முயன்றனர் என்ற சந்தேகத்தில் நைஜீரிய நாட்டைச் சேர்ந்த 4 பேரும், இலங்கையைச்

>> 21

நிர்வாக சேவை பரீட்சைக்கான வயதைக் கூட்ட கோரிக்கை

கொழும்பு, ஏப்.3

அரச நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வயது எல்லையை அதிகரிக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>> 21

தமிழர்களுக்கு கழுத்தறுக்கும் செய்கை காண்பித்தது சரியே

முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரத்ன கொக்கரிப்பு

கொழும்பு, ஏப். 3

தமிழர்களுக்குக் கழுத்தை அறுத்துக் காண்பித்த சைகை சரியானதே. நாட்டைத் துண்டாட நினைத்தால் இன்னொரு நந்திக்கடல் நிலமை ஏற்படும். நாட்டை துண்டாட முயல்வோருக்கு 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நந்திக்கடலில் நேர்ந்த நிலமையே ஏற்படும்.

இவ்வாறு இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால்

>> 04

15ஆம் திகதி விடுமுறையாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு மறுநாளான 15ஆம் திகதி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கோரிக்கைக்கு அமைய 15ஆம் திகதி விடுமுறை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி தமிழ் - சிங்களப் புதுவருடம் கொண்டாடப்படவுள்ளது.

மறுநாள் 15ஆம் திகதி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-7)

பயிற்சியில் ஈடுபட்ட வீரர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் சோகம்

யாழ்ப்பாணம், ஏப்.3

ஈருருளி ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விளையாட்டு வீரர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பூநகரி, அருகம்வெளியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

இந்த விபத்தில் யாழ்ப்பாணம், சுதுமலை, மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த

>> 21

கல்வியைக் கருத்தில் கொண்டு கேபிளுக்கு 2 மணி நேரத் தடை

கரவெட்டி பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்ப்பாணம், கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மாணவர்களின் கற்றலைக் கருத்தில் கொண்டு இரவு வேளை இரு மணித்தியாலங்களுக்கு கேபிள் தொலைக் காட்சி ஒளிபரப்புக்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபையின் சிறப்பு அமர்வு நேற்றுத்தவிசாளர்தலைமையில் நடைபெற்றது. அதன்போதே

>> 04

நடராசா சபாபதிப்பிள்ளை

அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை உவில்லியம் (ஆசிரியர்) தம்பதியரின் மருமகனும் அராலி வேலுப்பிள்ளை நடராசா தம்பதி களின் மகனுமாகிய சபாபதிப்பிள்ளை 30.03.2019 இல் கனடா வினிப் பெக்கில் காலமானார்.

அன்னார் ஞானசோதியின் அன்புக் கணவரும் கலாநிதி ஜ°லியன், கலாநிதி றூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெசிக்கா ஜ°லியனின் மாமாவும் ஜ°ட் ஜ°லியன், பெறி ஜ°லியன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மேரி பூரணம், அன்னம் மற்றும் செல்வராஜா, ராணி, சாந்தம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.04.2019) புதன்கிழமை கனடா நேரம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (04.04.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உவில்லியம் குடும்பத்தவரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

39, சந்நிதி வீதி, அச்சுவேலி. உவில்லியம் குடும்பம்.
021 205 8615/077 317 5387

மரண அறிவித்தல்

குமாரசாமி பாலசிங்கம்



திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாலசிங்கம் நேற்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - லட்சுமி தம்பதிகளின் மரு மகனும் காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும் சதீஸ்வரன் (பிரான்ஸ்), சிவகாமி (கிளி - ஜேர்மனி), சற்குனேஸ்வரி (பவுண்), உதயகுமார் ஆகியோரின் பாச மிகு தந்தையும் ஜெயந்தி (பிரான்ஸ்), வனஜா, காலஞ்சென்ற இளங்கோ ஆகியோ ரின் அன்பு மாமனாரும் சுரேன், சயனி, ஆதவன், அஸ்வின், ஆதிக்ஷா, சஞ்சீவன், சஞ்சிகா, சானுஜன், பர்னிகா, சானுஜா, டிலக்சிகா, டிலக்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கனகரத்தினம், பரமேஸ்வரி, செல்வ ராசா, இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான பழனித்துரை, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகராணி, குகனேஸ்வரி, ஜெயராணி, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், இரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2019) புதன் கிழமை பி.ப. ஒரு மணிய ளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.80, பாற்பண்னை வீதி, திருநெல்வேலி.
தகவல்: குடும்பத்தினர்.

விவசாயியின் கோழி!

சந்தைக்குப் போன விவசாயி ஒருவர், தனது தோட்டக் காய்கறி களை விற்றுவிட்டு வரும் வழியில் புதிதாக கோழி ஒன்றை வாங்கி வந்தார். வீட்டிற்கு வந்த கோழி புதிய இடம் என்பதால் பயந்து பயந்து இரைகளைத் தேடித் தின்று கொண்டிருந்தது. இதைக் கவனித்த விவசாயி, கோழியைக் கையில் பிடித்து பாசமுடன் தடவி இரையூட்டினார். நாள்கள் கடந்தன. கோழியும் வளர்ந்து பெரிதானது.

விவசாயியின் கோழியைப் போலவே பக்கத்து வீட்டில் ஒரு கோழி இருந்தது. அந்தக் கோழி, விவசாயியின் கோழிக்கு வைக்கும் உணவையெல்லாம் திருடித் தின்று வந்தது. ஒருநாள் இதைப் பார்த்து விட்ட விவசாயியின் கோழி, சண்டை போட ஆரம்பித்தது. இரண்டும் கடுமை யாக மோதிக் கொண்டன.

இதைப் பார்த்த விவசாயி, பக்கத்து வீட்டுக் கோழியை விரட்டியடித்தார். இதன்பிறகு பக்கத்து வீட்டுக் கோழி எப்போதும் கிண்டல் அடித்துக் கொண்டும், வம்பு பேசிக் கொண்டும் சண்டைக்கு இழுத்துக் கொண்டே இருந்தது. இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தது விவசாயியின் கோழி.

கொஞ்ச நாள்கள் கழித்து விவசாயியின் கோழிமுட்டைவைத்துகுஞ்சுப் பொரித்தது. தன்னுடைய கோழிக் குஞ்சு களை கண்ணும்கருத்துமாகபாதுகாத்து வந்தது.

இதைப் பார்த்த பக்கத்து வீட்டுக் கோழி மீண்டும் கிண்டல் செய்து, கோபமூட்டி வம்புக்கு இழுத்தது.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த விவசாயியின் கோழி சண்டை போட ஓடியது. ஓடிய வேகத்தில் கால்களை தூக்கியடித்து, சண்டைபோட ஆரம்பித்தது. இந்த நேரம் தனியே நின்ற குஞ்சுகளில் இரண்டு குஞ்சுகளைக் கழுகு தூக்கிச் சென்றது. கோழிக் குஞ்சுகள் கதறும் சத்தம் கேட்ட தாய்க் கோழி, சண்டையை விட்டுவிட்டு ஓடிவந்தது. ஆனால் அதற்குள் கழுகு குஞ்சுகளை உயரமாக தூக்கிச் சென்று விட்டது.

மற்றக்குஞ்சுகளைத் தன் சிறகுகளுக்குள் வைத்து காத்தது. தனது 'சின்னக் கோபத்தால் இரண்டு பிள்ளைகளை இழந்து விட்டோமே" என்று நினைத்து கண்ணீர் விட்டு அழுதது.

கவலையாக இருந்த விவசாயியின் கோழியை முன்பு மீண்டும் ஏளனமாக பேசிக் கிண்டல் செய்தது பக்கத்து வீட்டுக் கோழி, என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாய் இருந்தது. விவசாயியின் கோழி. அடுத்த நாள் பக்கத்து வீட்டுக் கோழி கதறும் சத்தம் கேட்டு, என்ன சத்தம் என்று விவசாயியின் கோழி பார்த்தது.

அடித்து குழம்பு வைப்ப தற்காக பக்கத்து வீட்டுக் கோழியை தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

மரண அறிவித்தல்

விஸ்வலிங்கம் கதிரவேலு

(சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்)

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கதிரவேலு நேற்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வ லிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான மயில் வாகனம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (ப. நோ. கூ. ச. சாவகச்சேரி), நளாயினி (பிரான்ஸ்), சதீஸ்வரன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் அமிர்தினி, சயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிதர்சனா, ரஜிகாந், சஞ்சீவன் (பிரான்ஸ்), சாகித்தியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2019) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத் தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, மடத்தடி சந்தி, சாவகச்சேரி.
தகவல்: குடும்பத்தினர்.
077 664 9396

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

மண்கும்பான்
அருள்மிகு வீரகத்தி விநாயகர்
மஹோற்சவம் - 2019
இன்று (03.04.2019)
புதன்கிழமை
மூன்றாம் திருவிழா
இடப வாகனத்தில்
சூரிய பிரபாவை
காட்சி உலா
F :mankumpan vellaipttady sri veerakathy vinayagar
அனுசரணை
மைதிலி நகைமாடம் (தனி) நிறுவனம்
89.V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7902
யாழ் மைதிலி ஜீவலறிஸ்
இல.79.Z, செட்டியார்தெரு கொழும்பு -11 011 239 6239

YAMAHA
Revs Your Heart
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை எம்மிடம்
Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்
மோட்டார் சைக்கிள்
ஒன்றை வாங்கி
ரூபாய் 3.5 மில்லியனுக்கும்
மேலான பெறுமதியுள்ள
Brand NEW
WAGONR ஐப்
பரிசாக வெல்லுங்கள்
அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக்
பொருள்களையும் வெல்லுங்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
DIGITAL ELECTROICE
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

சேவை நலன் பாராட்டு
திருவாளர்
இளையதம்பி இரட்ணம்
B.Com (KLN), HNDA, M. Phil. (UJ), MAAT.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
34 ஆண்டுகள் அரும்பணியாற்றி
ஓய்வு பெற்றுச் செல்வுள்ள
எமது பெருமதிப்புக்குரிய ஆசிரியரும்,
முன்னைநாள்துறைத் தலைவருமாகிய
திருவாளர் இ.இரட்ணம் அவர்களை
மனதாரப் பாராட்டி வாழ்த்தி
மகிழ்கின்றோம். மேலும் அவரது
ஓய்வுக்காலம் ஆரோக்கியமானதாகவும்
மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய
இறைவனைப் பிரார்த்திகின்றோம்.
நீடூழி வாழ்க!!!
விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள்,
சந்தைப்படுத்தல் துறை,
முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

WesternUnion WU
Sampath remittance service
வெளிநாட்டிலிருந்து பெறும் பணத்திற்கு
பயணப் பை எங்களிடமிருந்து
5000
உங்கள் அன்புக்குரியோர், வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பும் பணத்தை, சம்பத் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் உங்களுக்கு பெறுமதிமிக்க பயணப் பை இலவசம்.
நம்பிக்கையுடன், பாதுகாப்பு மிக்க சேவையை மிகத் துரிதமாகப் பெற்றுத் தரும் சம்பத் வங்கியின் வெஸ்டர்ன் யூனியன் ஊடாக,
2019 மார்ச் 22 முதல் ஜூன் 22 வரையான காலப்பகுதியில், குறைந்தபட்சம் இரண்டு முறை பணம் அனுப்பியிருந்தால், பெறுமதி வாய்ந்த இந்தப் பரிசு உங்களுக்கே.
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
0112 30 30 50 www.sampath.lk
Sampath Bank PLC - Company No. PQ 144

வேலைவாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் கட்டட நிர்மாண வேலைசெய்வதற்கு மேசன் , கம்பி வேலை செய்பவர், தச்சு வேலை செய்பவர் (சட்டறிங் வேலை), கூலியாள்கள் உடன் தேவை. நாள், கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

076 826 4859, 077 712 0945

வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்தில் (CIDA C4) பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன

01. Technical Officer (Civil) (HND, NCT Or Equivalent with Building Experience)

02. Quantity Surveyor (HND (QS), NCT (QS) Or Equivalent With Minimum 1 year experience)

Fax : 0212213663

077 712 0945 Email: vacancynsc@gmail.com

ST. JOHN'S COLLEGE, JAFFNA

We are looking for energetic, self - motivated and hard working teachers to join our team in the following positions:

1. Western Music Teacher

Relevant music teaching experience and qualifications
Energetic, caring and enthusiastic
A very positive attitude and willingness to work with pupils of all musical ability and cooperate well with all staff
Exceptional level of English

2. Teacher for Special needs & Autistic Students

Relevant qualification with previous working experience in this capacity will be an advantage.

3. Office Work/ Management Assistant

Good command of English & Computer skills essential

Please send your CV with contact details of two non - related referees by registered post on or before 10th April 2019 to the address below:

(Accommodation will be provided for outstation candidates.)

The Principal,
St.John's College, Jaffna.

துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி ய. சிவபாதசக்தி அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி பொ. கனகவல்லி

30.03.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உப அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி.

சேவைகள்

"ONLINE" (ஒன்லைன் விசா) விண்ணப்பங்கள் - கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, லண்டன், செங்கன் நாடுகளுக்கான நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், சுவிடன், பெல்ஜியம், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நிரந்தர விசா, தற்காலிக (விசிட்) விசா விண்ணப்பப் படிவங்களும், சத்தியக் கடதாசி வேலைகளும், உடனடியாகவும், முறையாகவும், சரியாகவும் பூர்த்தி செய்து தரப்படும். **காலை 7.30 இல் இருந்து மாலை 05.30 வரை** தொடர்பு கொள்ளவும். எனக்கு வேறு கிளை அலுவலகமோ உதவியாளர்களோ கிடையாது.

தொடர்பு: **திருமதி ஞானேஸ்வரி குமரகுரு, ஜே.பி., (அகில இலங்கை)**
SECRETARIAL & ALIED SERVICES
S - 68, **3ஆவது மாடி, கொழும்பு கோல்ட் சென்ரர்,**
(பழைய மாலுக்கடை) கொழும்பு - 11.
தொலைபேசி: 077 375 3791 / 011 2431 725/ 011 313 3945
Viber: **077 2991 482**
இமெயில்: gnaneswaryk@gmail.com

துயர் பகிர்கின்றோம்

கடந்த 30.03.2019 அன்று இறைபதமடைந்த எமது பாடசாலையின் அதிபர்
பொ. ஆறுமுகரஞ்சன்
அவர்களின் தந்தையார்

ஆறுமுகம் பொன்னம்பலம்

அவர்களின் மறைவுக்கு எமது ஆழந்த அனுதாபங் களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/ வலி/ மாதகல் நுணசை வித்தியாலயம்
மாதகல்.

(cs.14559) (13.17)



சொற் கோபுரம் அமைப்போம்

1.முக்கனிகளில் ஒன்று
2.சிற்பி செதுக்குவது
3.கவிஞன் இயற்றுவது
4.உழவுத்தொழில் செய்பவன்
5.அரசன் வாழும் இடம்
6.சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை
7.திசையை அறிய உதவும் கருவி

எறும்பு

சின்ன சின்ன எறும்பே
சிங்கார சிற்றெறும்பே !

உன்னைப் போல்
நானுமே
உழைத்திடவே
வேணுமே !

ஒன்றன் பின்னே
ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய் !

நன்றாய் உம்மைக் கண்டே
நடந்தால் நன்மை உண்டே !

உலக தினங்கள்

ஜனவரி- 01-உலக குடும்ப தினம்
-உலக சமாதான தினம்
ஜனவரி- 4-உலக பிறெய்லி தினம்
ஜனவரி- 26-உலக சுங்கத்துறை தினம்
பெப்ரவரி- 14-உலக காதலர் தினம்
பெப்ரவரி- 20-உலக சமூக நீதி தினம்
பெப்ரவரி- 21-உலக தாய்மொழி தினம்
பெப்ரவரி- 22-உலக சாரணியர் தினம்
மார்ச்- 08-உலக மகளிர் தினம்
மார்ச்- 15-உலக நுகர்வோர் உரிமைகள் தினம்
மார்ச்- 27-உலக வினா தினம்

தமிழர்களுக்கு...

குணரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான வியத்கம அமைப்பு 'நாடும் - நாளையும்' என்ற தலைப்பில் நாடு தழுவிய ரீதியில் நடத்தத் தீர்மானித்த கருத்தரங்கின் முதலாவது அமர்வு பியகமவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கமால் குணரத்ன இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

லண்டனில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கழுத்தை அறுப்பது போன்ற சைகையைக் காண்பித்து அங்கிருந்து சென்றார். எமது நாட்டில் நல்லிணக்கம் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளும் பலரும், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் அந்தச் செயல் இராஜதந்திர செயற்பாடுகளுக்குப் பொருத்தமற்றது என்றும், கீழ்த்தரமான செயல் என்றும் குற்றம்சாட்டினர். தனது தாய்நாட்டின் தேசியக் கொடியைக் கீழே போட்டு மிதித்துக்கொண்டிருப்பதைக் கண்டும் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கும் இராணுவ அதிகாரியொருவர் இருந்தால், அந்த நபர் இராணுவ அதிகாரியாக இருக்க முடியாது.

பிரபாகரனின் அதிகாரம் வடக்கில் இருக்கும் போது வாலைச் சுருட்டிக் கொண்டு நாய்குட்டிகளைப் போல் இருந்துவிட்டு இன்று வெளியில் வந்து நாய்களைப் போல் குரைத்துக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலருக்காக எமது நாட்டின் இறையாண்மையைக் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. காட்டிக்கொடுப்பது தொடர்பில் நீண்ட வரலாற்றைக்கொண்ட இவர்களது முழுமையான பட்டியலை நான் இங்கு கூறப்போவதில்லை. அயலுறவு அமைச்சர் சென்று ஜெனீவாத் தீர்மானத்தின்படி வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்துக்கொள்ள எமது நாட்டின் அரசியல் சாசனத்தில் இடமில்லை என்று அறிவித்தார். எதற்காக மீண்டும் அந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினீர்கள்?. அன்று செய்த அதே துரோகத்தை எதற்காக இம்முறையும் செய்தீர்கள்?- என்றார்.

அதேவேளை, போரின் இறுதியில் 53ஆவது படையணியை வழிநடத்திய கமால் குணரட்ன மீதும் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்பினரால் சுமத்தப்பட்டுள்ள வருகின்றமை தெரிந்ததே.

(எ-த)

கல்வியைக்...

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமர்வில் கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கம்பங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விவாதம் நடைபெற்றது.

கேபிள் தொலைக்காட்சிக் கம்பங்கள் நடுதல், அது தொடர்பான அனுமதி பெறுதல் என்பவற்றில் இணைப்பை வழங்கும் நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். நினைத்த இடத்தில் கம்பங்களை நட்டு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. முறையான அனுமதியைப் பெற்றுச் சபையின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று அவற்றை நட வேண்டும் என்று விவாதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கம்பங்கள் நடுவதில் உள்ள சிக்கல் நிலைமை போன்று மாணவர்களின் கல்வியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இரவு நேரங்களில் குறிப்பாக 7 மணி முதல் 9 மணிவரை வரிசையாகத் தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட நேரம் மாணவர்கள் கற்கும் நேரமாகும் 9 மணிக்கு நாடகங்கள் நிறைவடைய மாணவர்கள் உறக்கத்துக்குச் செல்லும் நிலையே இப்போது உள்ளது. இது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

கரவெட்டிப் பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட பகுதிகளில் மாணவர்களின் கற்றலைக் கருத்தில் கொண்டு இரவு 7 மணி முதல் 9 மணி வரை கேபிள் தொலைக் காட்சி ஒளிபரப்புக்குத் தடை விதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. கேபிள் இணைப்புக் கம்பங்கள் நடுவதற்கு சபையின் அனுமதியைப் பெற வேண்டியிருப்பதால் அதற்கான அனுமதி மற்றும் வருடாந்த அனுமதியை வழங்கும்போது இந்த அறிவுறுத்தலை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-7,26)

துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் பதில் அதிபரும் சிரேஸ்ட பிரிவின் இந்நாள் பகுதித் தலைவரும் எமது கல்லூரி மாணவி **சி.சங்கவி** (தரம் 06) அவர்களின் அன்புத் தாயாருமாகிய

திருமதி கலாநிதி சிவனேசன்

அவர்கள் கடந்த (28.03.2019) வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கல்லூரிச் சமூகம், யா/ காரைநகர் இந்துக் கல்லூரி

மரண அறிவித்தல்

ஜி. பி. அல்பிறெட்

(ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர், தமிழ்த்துறை, கல்வியமைச்சு இசுறுபாய)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜி.பி. அல்பிறெட் நேற்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இல 69, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள துதி அந்தியகால சேவை மலர்ச்சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 315 4188
077 614 3133

தகவல்: சுந்தரம் குடும்பத்தினர் யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வரையரையற்ற வசதிகளை வழங்கும் நோக்குடன் மக்கள் வங்கி புதிய சுற்றாடல், தொழில்நுட்பத்துடன் கூடிய கிளை அங்குரார்ப்பண வைபவம் அண்மையில், மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான திரு. என். வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

நவீன வங்கி முறைமையில் புதிய மாற்றம்... இப்பொழுது முல்லைத்தீவு நகரத்தில்...

இந்தப்புதிய டிஜிட்டல் பிரிவின் People's Wiz Credit வசதியின் ஊடாக குறுகிய காலத்தில் கடன்களைப் பெற்றுக்கொள்வதோடு People's Wiz Account ஊடாக விரைவாக டிஜிட்டல் கணக்கையும் ஆரம்பிக்கலாம். அத்துடன் கய வங்கிச்சேவைப் பிரிவு முலம் பணத்தை இலகுவாக வைப்புச் செய்தல், மீளப்பெறுதல், கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்ளுதல் போன்ற தேவைகளை 24 மணி நேரமும் மேற்கொள்ளமுடியும்.

வாருங்கள்... டிஜிட்டல் முறைமையின் வசதியை
சுதந்திரமாக அனுபவியுங்கள்

PEOPLE'S BANK
The Bank of the People

1961 PEOPLE'S BANK CALL CENTRE
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் சின்னப்பு
சின்னராசா செபரத்தினம்

[ஓய்வுபெற்ற உளவு ஆமட்கோ படையணி, இலங்கை இராணுவம்]

மண்ணில்
08.07.1938

விண்ணில்
04.03.2019

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகைதந்து அஞ்சலி செலுத்தி செபித்த குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இலங்கை இராணுவ படை அதிகாரிகள், அணிவகுப்பு மரியாதை செய்த வீரர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகிறோம். உள்ளூரிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் அஞ்சலி செலுத்திய நல்லுள்ளங்கள் மலர்வளையம் அனுப்பி யோர் திருப்பலி ஒப்புக்கொடுத்தோர் நினை வஞ்சலி வெளியிட்டோர், பல்வேறு வகையி லும் எம்முடனிருந்து எம் துயரில் கரம் கொடுத்த அனைவரையும் நன்றிகூறி தலை சாய்க்கிறோம். எமது தந்தையின் 31ஆம் நாள் நினைவஞ்சலி, திருப்பலியிலும் (கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் இன்று (03.04.2019) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடை பெறும்.) அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துசெல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்

All the Glory to the Lord! Expression of thanks

The family members of late Mr. S. S. Sebaratnam who passed away peacefully on 4th march 2019 wish to sincerely thank all relatives, Friends, well wishers and the clergy who officiated at the funeral : Loving support, help and assistance during our hours of bereavement and sorrow and to all those who sent condolence messages and floral triputes and to all Armoured corps for your presence and military honours specially captain Adjutant BSR Samarasekara and lieutenant Colonel KMAP karunaratne for your condolence message and to each and everyone who attended the funeral.

We regret our inability to thank everyone individually please accept our sincere thanks and gratitude.

Family Members

மரண அறிவித்தல்

நல்லதம்பி சசிதரன்

(தபால் ஊழியர், புங்குடுதீவு, ஊரதீவு சனசமூக நிலைய உபதலைவர், புங்குடுதீவு மடத்துவெளி பாலசுப்பிரமணிய ஆலய பொருளாளர், புங்குடுதீவு மடத்துவெளி நுளைவாயில் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பொருளாளர், புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை நாகதம்பிரான் கோயில் தேவஸ்தான பொருளாளரும், பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நீர்வாக உறுப்பினரும், முன்னாள் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினருமாவார்)

தோற்றம்
22.09.1975

மறைவு
31.03.2019

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கு வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சசிதரன் 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பராசக்தி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் தவச்செல்வம் - புஷ்பராணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சைலஜாவின் பாசமிகு கணவரும் பிரவீனா, நருஷனன், கவினா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா(Holand), காலஞ்சென்ற நடேசலிங்கம் மற்றும் புஷ்பராசா, றஞ்சிதராணி, சிவராசா, ஜீவராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகராணி, சித்திராதேவி, மதிகரன், மதிவதனி, றஞ்சித் ஆகியோரின் மைத்துனரும் சாலினி, சிவசன், சதீசன், மயூரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சிறிகோபினாத்தின்(தபாலகம்) சகலனும் நிந்துசன், அல்மெடா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மிதுஷா, மோனிசா, கலீபன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் சஜித்தின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சரவணையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அதன்பின்னர் முற்பகல் 11.00 மணியளவில் புங்குடுதீவு தபாலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அவரது பூதவுடல் புங்குடுதீவு கேரதீவு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சரவணை கிழக்கு,
வேலணை.

(CS 24457)
(14,17)

077 975 7514(ராசன்)/ 077 491 3117(கோபி)/ 077 122 0645 (சிவசன்)

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடிட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்

ABI Fashion World

அபி பஷன் வேல்ட்

இந்தியாவில் இருந்து புதுவருடத்திற்கு
என இறக்குமதி செய்யப்பட்ட நவீன
ஆடைத் தெரிவுகள் உங்களுக்காகவே...

3ஆவது தளத்தில் 40% விசேட தள்ளுபடி

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைந்த சேவை.

(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)

13.04.2019 வரை

10 நாள்கள் மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம
தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
19 . 07 . 1947

சிவன் அடியில்
05 . 03 . 2019

அமரர் பொன்னையா கந்தசாமி

(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர். யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஸ்ட பதிவாளர். கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில். கைதடி இனுருங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில். கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர். கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர். அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)

கடந்த 05.03.2019 அன்று சிவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் பொன்னையா கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (04.04.2019) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் கைதடி இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் தெய்வம் சிவனடி சேர்ந்த வேளையில் எங்கள் துயரில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உறுதுணை புரிந்த அன்பு உள்ளங்கள் எல்லோரிற்கும் சிரம் தாழ்த்தி. மதிப்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

"புஸ்பவனம்"
கைதடி கிழக்கு, கைதடி.

அன்புடன்
குடும்பத்தினர்.

(CS 23805)(04.17)

உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

நீரில் உள்ள பிரச்சினைகளின்
தீர்வாக நாங்கள்....

12 MONTHS WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty



நீங்கள் அருந்தும் நீர்
Yarl Smart Water Filter நீர் ஆக
இருந்தால் நீங்களும் SMART

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டடிருக்கும்
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

Yarl Smart Water Solution (Pvt) Ltd

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410

No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.

வாகனம் விற்பனைக்கு

ஆறுசில் (Six Wheel Lorry), 3 Cube ரிப்பர் விற்பனைக்குண்டு

தொடர்பு - 075 656 3907

வேலையாள் தேவை

நெல்லிக்கிறஸ் தயாரிப்பதற்கு அனுபவமுள்ள பகுதிநேர வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (CS 24456) (14.17)

077 080 3958

நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 9306/077 138 7596

ஆங்கில வகுப்புக்கள்

Spoken English With Grammar

கடந்தகால வினாத்தாள்கள் மீட்டல். (O/L, A/L) பாடசாலை புத்தகப் பயிற்சி வினாவிடைகள் உச்சரிப்பு. எழுதுதல் மற்றும் வாசிக்க அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரினால் வீடுகளிற்கு வந்து கற்றுத்தரப்படும்.

076 615 1837

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகாவும், சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்யப்பட்டது

1Kg 480 மட்டும்

U.S A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

077 868 9500

குருக்கள் தேவை

ஆலய நித்திய நைமித்திய கிரியைகளை சிறப்பாக நிறைவேற்றக் கூடிய அனுபவம் மிக்கவராகவும், ஐம்பத்தைந்து வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தங்குவதற்கு வீடு வழங்கப்படுவதுடன் வேதனம் பேசித்தீர்மானிக்கலாம்.

"தலைவர் அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம், இல.100, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்" எனும் விலாசத்திற்கு கடித மூலம் விண்ணப்பிக்கலாம்.

தேவஸ்தானம்

6 ஆம் ஆண்டு நினைவு

திருமதி தனேஸ்வரி சபாரத்தினம்

தோற்றம் 20.11.1939

மறைவு 08.04.2013

திதி: 03.04.2019

பண்புடன் நல்வழி பல காட்டிய உங்களை
அன்புடன் அம்மம்மா என அழைத்திட
மண்ணில் வாழ்ந்த வாழ்க்கை போதுமென்றோ
விண்ணுலகம் ஏகினீரோ அம்மம்மா.....
ஆறு ஆண்டுகள் சென்றாலும்
ஆறாகத்தொடரும் உங்கள் நினைவுகள்

அம்மன் கோயிலடி,
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்

முழுநேர/பகுதிநேரவேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு **காப்புறுதி ஆலோசகராக** யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமைகள்

- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்பப்பங்களை 15.04.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: JF1005
C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விழிநீர் சொரிகின்றோம்

எமது பாடசாலை முன்னாள் ஓய்வுநிலை உயிரியல் ஆசிரியரும், பழைய மாணவியுமான

அமரர் திருமதி
குமுதினி சபாநாயகம்

அவர்கள் 01.04.2019 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(IN 9796)(04.17)

மரண அறிவித்தல்

செல்லப்பா சின்னையா

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்)



யாழ். பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சின்னையா 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வமலரின் அன்புக் கணவரும் இன்பமலர் (ஆசிரியை - யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்), மதிவதனி (சுவிஸ்), மணி வண்ணன், சிவச்செல்வி (விரிவு ரையாளர் - தொழில் நுட்ப பல்கலைக் கழகம், இரத்மலானை), மயூரன் (இலண்டன்) ஆகியோரின் தந்தையும் சிறிகுமரபரன் (ஆசிரியர் - கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர் - தொழில்நுட்ப பல்கலைக்கழகம், இரத்மலானை), தாரணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகா, செந்தூரன், நவீனன், மதீனன், சங்கவி, ஸ்ரீராம், மதுவந்தி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2019) புதன்கிழமை பொலிகண்டி ஊரணி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பலடி, பொலிகண்டி வல்வெட்டித்துறை

தகவல்: குடும்பத்தினர்

077 406 5556, 077 6717393, 021 226 2626

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை நடேசன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உடையர்காட்டு முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடேசன் திருநெல்வேலியில் நேற்று (02.04.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய வேலுப்பிள்ளை - இரத்தினம்தம்பதியின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான தர்மகுணாநந்தன், ஜெயப்பிரியா, மற்றும் சத்தியப்பிரியா ஆகியோரின் தந்தையாரும் ஜெகதீஸ்வரனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகையா, தங்கம்மா மற்றும் தர்மலிங்கம், பகவதி, ஏக்கிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஷானுசன், வதனன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 307 9224

This project is funded by: European Union
ஒருங்கிய கலைமை ஐரோப்பிய ஒன்றியம்

This project is Implemented by: Habitat for Humanity Sri Lanka, World Vision

விலைமனுக் கோரலுக்கான அழைப்பு

அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்கள் (CSEB) தயாரிப்பதற்கான கிறவல் மண் கொள்வனவு

ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி மற்றும் வேல்ட் விஷன் லங்கா ஆகியன கிறிஸ்தவ அரசசார்பற்ற நிறுவனங்களாகும். இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக "வீடு அல்ல வாழ்விடம்" என்ற தொனிப்பொருளின் கீழான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஹபிட்டாட் மற்றும் வேல்ட் விஷன் என்பன இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஒரு தொகை வீடுகள் அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்களைப் (CSEBs) பயன்படுத்தி சூழல் நேய வீடுகள் நிர்மாணித்துக் கொண்டு வருகின்றன, இவற்றில் இன்னும் 600 சூழல் நேய வீடுகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்த இல: NORTH/HFHSL/GRV/2019-1 பிரகாரம் பொருத்தமான கிறவலை கீழ்குறிப்பிடப்பட்ட CSEB உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு விநியோகிப்பதற்கு இலங்கையில் பதிவு செய்துள்ள தகுதியுடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை கோரப்படுகின்றது.

பொருள்	விபரம்	அளவு	தொகை (நிலை 1)	விநியோகிக்கப்பட வேண்டிய இடங்கள்
கிறவல்	குறைவான களி, வண்டல் கொண்டதும் மற்றும் தாவரப் பகுதிகளற்ற அங்கிகரிக்கப்பட்ட கட்டுமான தரத்திலான கிறவல் மண்.	கியூப்	3500.00	புளியம்பொக்கனை, தர்மபுரம், கிளிநொச்சி (12.5 Km பரந்தன் சந்தியிலிருந்து A35)
கிறவல்		கியூப்	1500.00	RDS கட்டிடம் தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
கிறவல்		கியூப்	2000.00	இளங்கோபுரம், தேராவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (பழைய RDS கட்டிடம்)

விலைமனுக் கோரலுக்கான விண்ணப்பபடிவத்தை 01-04-2019 தொடக்கம் 08-04-2019 (கிழமை நாட்கள்) காலை 08.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரையிலான காலப்பகுதியில் ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி சிறிலங்கா, கீழ்வரும் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய அலுவலகம்	கிளிநொச்சி மாவட்ட அலுவலகம்	முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம்
42/14, ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 03.	27, கிருஷ்ணன் கோயில் வீதி, கிளிநொச்சி.	வட்டாரம்-01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
தொ.இல: 0112577102-10	தொ.இல: 021 2283290, 0772320957	தொ.இல: 021 229 0389, 0763525493

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 23-04-2019 இலங்கை நேரப்படி மதியம் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்ககூடியவாறு மூடிய கடித உறையிலிட்டு மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும். விலைமனுக் கோரல் தெரிவானது 26.04.2019 அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

கேள்வி மனுக்கோரல் சம்மந்தமாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் மாவட்ட திட்ட முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

நிறுவனங்களின் திட்ட தலைமை அதிகாரி,
ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி சிறிலங்கா, கொழும்பு

பொதுமக்கள் தினம்

யாழ்ப்பாணம்.ஏப் 3
வடக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் இன்று புதன்கிழமை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வு வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலர்கள்மற்றும்திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஈ-7)

வேலை தேடும் பட்டதாரிகள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3
வடக்கு மாகாண வேலை தேடும் பட்டதாரிகள் சங்கத்தால் இன்று புதன்கிழமை காலை யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்றும், வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த வேலை தேடும் பட்டதாரிகள் அதில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-26)

அரசதலைவர் தேர்தல் வேண்டாம் என கவனவீர்ப்பு

"இன்னுமொரு அரசதலைவர் தேர்தல் வேண்டாம், நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறையை ரத்துச்செய்" என்று வலியுறுத்தி பூண்டுலோயா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு நடத்தப்பட்டது.
மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. 100க்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டு, சுலோகங்களை ஏந்தியவாறு, எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர்.
கட்சியின் கொத்மலை பிரதேசசபை உறுப்பினர்கள், அரசியல்கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)

தரம் 5 பரீட்சைக்குப் பதிலாக 8ஆம் தரத்தில் ஒரு பரீட்சை

அரசதலைவர் ஆலோசனை முன்வைப்பு

கொழும்பு, ஏப். 3

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பதிலாக 7 அல்லது 8ஆம் ஆண்டில் பரீட்சை ஒன்றை நடத்த எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பெறுபேறுகளுக்கமைவாக மாணவர்களின் திறமைகளுக்கேற்ப ஒவ்வொரு பாட பிரிவுகளுக்கும் மாணவர்களை நெறிப்படுத்தும் வகையில் கல்வியியலாளர்களின் வழிகாட்டலில் அந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொடகம சுபாரதி மகா மாத்ய வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அரசதலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்வதன் ஊடாக உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் கல்வி முறைகளுக்கு ஏற்ற வகையில் எமது நாட்டின் கல்வித்துறையிலும் மாற்றங்களை ஏற்படுத்துவோம்.
மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணிதவியலாளர்கள், விவசாய நிபுணர்கள், தொழிநுட்ப நிபுணர்கள் உள்ளிட்ட துறைகள் வரை பிள்ளைகள் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இதனூடாகக் கிடைக்கும்.
புலமைப்பரிசில் தொடர்பில் கல்வி, விஞ்ஞான ரீதியில் சிக்கல் நிலை காணப்படுகிறது. கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியற்ற மிக வறிய குடும்பங்களின் பிள்ளைகள், அரச பாடசாலை உள்ளிட்ட தரப்புக்குக் கொடுப்பனவு வழங்கி, மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கும் நோக்குடன் ஆரம்பமான புலமைப்பரிசில் பரீட்சை இன்று பிரபல பாடசாலைகளிலும் ஜனரஞ்சகமான பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான ஒரேயொரு தடைத்திறனாக மாறியுள்ளது. கல்வித்துறையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுள் 86 சதவீதத்தினர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய கல்வி முறை யில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் - என்றார். (த)

தலைவலியால் மயங்கியவர் சிகிச்சை பயனின்றிச் சாவு!

மன்னாரில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
தலையில் ஏற்பட்ட வலியை அடுத்து மயங்கி விழுந்த இளம் பெண் சத்திரசிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் திடீரென அவர் உயிரிழந்தமை பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.
மன்னார், தட்சணா மருதமடு, பாலம்பிட்டியைச் சேர்ந்த கைலாசபிள்ளை ஹேமா (வயது -28) என்பவரே உயிரிழந்துள்ளார்.
அவர் திடீரென தலையில் ஏற்பட்ட வலியை அடுத்து மயக்கமடைந்துள்ளார். அதையடுத்து அவர் மன்னார், மடு மருத்துவமனையில் உறவினர்களால் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் அவரது தலையில் கட்டி ஒன்று இருப்பதைக் கண்டறிந்தனர். அதையடுத்து அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் சத்திரசிகிச்சை பயனளிக்காது அவர் தொடர் மயக்க (கோமா) நிலைக்குச் சென்றார். நேற்று முன்தினம் பிற்பகல் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மட்டக்களப்பு, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தில் கல்வி பயின்ற இவர் கடந்த ஆண்டு செம்ரெம்பர் மாதம் நடந்த பட்டமளிப்பு விழாவில் பட்டத்தைப் பெற்றிருந்தார். (ஏ-56)

பாம்பு தீண்டி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்ப்பாணம், சரவணை 9ஆம் வட்டாரத்தில் பாம்பு தீண்டியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட வழியில் உயிரிழந்தார்.
புங்குடுதீவு தபால் நிலையத்தில் பணியாற்றும் நல்லதம்பி சசிதரன் (வயது 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.
இரவு சுமார் 9 மணியளவில்பாம்புதீண்டியுள்ளது. அவரை உடனடியாக போதனா மருத்துவமனைக்கு கொண்டுசென்ற போதும் அவர் வழியிலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போது கடும் வெப்பத்துடனான காலநிலை காணப்படுகின்றது. அதனால் பாம்புகள் புற்றிலிருந்து வெளியேறி குடிமனைகளுக்குள் புகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-105)

புத்தாண்டை முன்னிட்டு தொழில் நிலையங்களில் நேரக்கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், ஏப் 3
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வாடிக்கையாளர் நலன் கருதி தொழில் நிலையங்களின் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.
எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்படும்.
அத்துடன் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொழில் நிலையங்கள் திறந்து நாள் வியாபாரம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சமாசத்தின் தலைவர் ஆ.உதயசங்கர் தெரிவித்தார். 15 ஆம் திகதி தொடக்கம் வழமையான நேரக்கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

நிரந்தரமான மருத்துவர் நெடுந்தீவுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்ப்பாணம், நெடுந்தீவில் சேவையாற்றுவதற்கு நிரந்தர மருத்துவர் ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
ஆண்டுதோறும் குறைந்த மருத்துவர்களே வடக்குக்கு நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்துக்கு ஏற்ப மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவர். நிரந்தர மருத்துவர்கள் இல்லாத நிலையில் சில மருத்துவமனைகள் இயங்குகின்றன.
நெடுந்தீவில் சேவையாற்றுவதற்கு மருத்துவர்கள் முன்வராத நிலையில் அங்கு நிரந்தர மருத்துவரை நியமிக்க முடியாதிருந்தது.
தற்போது அங்கு ஒரு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
நெடுந்தீவில் நிரந்த மருத்துவர் நியமிக்கப்படாது இருந்தபோது, ஓய்வு பெற்ற மருத்துவர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். (ஏ-7)

முட்டாள்கள் தினமான ஏப்ரல் 1ஆம் திகதி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் முட்டாள்களுக்குப் பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளது. போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முகத்தை அவலட்சணமாக்கி, பல நோய்களை ஏற்படுத்தும் சிகரெட்டை காசு கொடுத்து வாங்கி ஏமாறுவோருக்காகவே இந்தப் பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். (ஏ)

பாலங்கள் விரைவில் மறுசீரமைப்பு

வலி.மேற்கு, ஏப் 3
யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த பாலங்கள் தொடர்பான முன்மொழிவுகளுக்கு அமைவாக மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தன எடுத்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி ரீதியாக 6 மீற்றர்கள் நீளம் தொடக்கம் 30 மீற்றர் நீளம் வரையிலான பாலங்கள் மறுசீரமைப்புக்காக தொகுத்து அனுப்பியிருந்தனர். இதற்கு அமைவாக மீள்சீரமைப்புச் செய்ய முதற்கட்ட ஆய்வு பணி இடம்பெறவுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் கிராமிய மட்ட பாலங்களின் அபிவிருத்தி இடம்பெறவுள்ளது. (ஐ-50)

செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப் 3
யாழ்ப்பாணம் கட்டுடை மானிப்பாய் விநாயகர் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.பிரதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மானிப்பாய் கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரன், சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் வெ.அன்ரன் ஜோன்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-63)



50 ஆயிரம் போத்தல்களில் பதனீர்

யாழ்ப்பாணம், ஏப்.3
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்தப் போகத்தின் போது ஐம்பது ஆயிரம் வரையிலான போத்தல்களில் பதனீரை அடைக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.
தற்போதைய கடும் வெப்பத்தை அடுத்து ஆகக் கூடுதலான பதனீர் உற்பத்தியில் சங்கம் ஈடுபட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார். பதனீர் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அடுத்து வரும் நாள்களில் பதனீர் நுகர்வோருக்கு சந்தைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதனீர் சகல விற்பனை நிலையங்களிலும் அவற்றை நுகர்வோர் பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இந்தப் பதனீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

வெளியிட வர்த்தகர்களை இங்கு அனுமதிக்காதீர்கள்

வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப் 3

வடபகுதி வர்த்தகர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் பண்டிகைக் காலங்களில் வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு வடபகுதியில் அனுமதி வழங்கவேண்டாம். இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட வணிகர் கழக உப தலைவருமான ஆர். ஜெயசேகரன் உள்ளூராட்சி திணைக்களங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் தென்னிலங்கை வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் வடபகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: பண்டிகைக் காலங்களில் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு வியாபாரிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். அதனைத் தடை செய்ய மாகாண சபையில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தோம். அதற்கும் மேலாக சில சட்டவாக்க நடவடிக்கைகளும் வகுக்கப்பட்டு அனைத்து உள்ளூராட்சி திணைக்களங்களுக்கும் உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பிவைக்கப்பட்டது.
அந்த அறிவுறுத்தலின் படி உள்ளூராட்சித் திணைக்களங்கள் செயற்பட வேண்டும். ஏனெனில், உள்ளூர் வர்த்தகர்கள் வரி செலுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். வெளி மாவட்டத்தில் இருந்து வர்த்தகர்கள் வருகை தந்து, வீதிகளிலும், வேறு பிரதேசங்களிலும் நிரந்தர வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறான நிலையில் வடபகுதி வர்த்தகர்களின் பொருளாதார நிலை மிகமோசமாக பாதிக்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியினாலும், வர்த்தக நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடைவினாலும் பல வர்த்தகர்கள் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர். இந்த விடயத்தில் உள்ளூராட்சி திணைக்களங்கள் தயவுகூர்ந்து கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். போரினால், பொருளாதாரம் முற்றாக அழிவடைந்துள்ளது. அந்தவகையில், வடக்கு மாகாண வர்த்தகர்களை ஊக்குவித்து கைகொடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது. தென்னிலங்கை வர்த்தகர்கள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இதே போன்று வடபகுதி வர்த்தகர்கள் தென்னிலங்கையில் சென்று வர்த்தகத்தில் ஈடுபட முடியாது. அவ்வாறு வர்த்தகத்தில் ஈடுபடுவார்களாயின் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலைகளும் உள்ளன.
எமது வர்த்தகர்களுக்கு இடையூறாக வர்த்தகத்தில் ஈடுபடும் தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது- என்றார். (ஐ-106)

சிறப்பாக இடம்பெற்ற பங்குனித் திங்கள் உற்சவம்

சாவகச்சேரி, ஏப்.3
தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் நேற்றுமுன்தினம் பங்குனித் திங்களின் மூன்றாம் நாள் உற்சவங்களை முன்னிட்டுப் பொங்கல் மற்றும் அன்னதான நிகழ்வுகள் இடம்பெற்றன.
மட்டுவில் வடக்குப் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் அதிகாலை தொடக்கம் அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். ஆலய வளாகத்தின் நான்கு வீதிகளிலும் பொங்கல் வைத்துப் பொங்கியதால் எங்கும் புகை மண்டலமாகக் காணப்பட்டது. பிற்பகல் 11 மணிக்குப் பின்னர் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆட்டக்காவடிகள், பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள் பாற்செம்புகள் ஒன்றன்பின் ஒன்றாக கோவில் வளாகத்தில் வந்த வண்ணமிருந்தன.
கோவில் முன்றலில் அமைக்கப்பட்ட பந்தலில் அடியார்கள் தமது பொங்கலைப் படைத்து ஏனைய அடியார்களுக்கு வழங்கியதையும் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் தெற்கு வீதியில் உள்ள அன்னதான மடங்களிலும் அன்னதானம் வழங்கப்பட்டது. (ஐ-9)

சேவைநலன் பாராட்டு நிகழ்வு

தெல்லிப்பழை, ஏப்.3
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி ரதி நகுலேஸ்வரனுக்குச் சேவைநலன் பாராட்டு நிகழ்வு நடத்தப்பட்டது.
பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தால் தெல்லிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்வுகள் நடைபெற்றன. சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராட்டுப் பத்திரத்தை பிரதேச செயலர் ச.சிவசிறி வழங்கி மதிப்பளித்தார். (ஐ-9)

சர்வமத வழிபாட்டுத்தலம் திறந்து வைக்கப்பட்டது

வடமராட்சி, ஏப் 3
அனைத்து மதத்தவர்களும் வணங்கக் கூடியவகையில் சர்வமத வழிபாட்டுத்தலம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் திறந்துவைக்கப்பட்டது.
நேற்றுக் காலை 7.30 மணியளவில் காங்கேசந்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகம சூரிய தலைமையில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் பொதுமக்கள், சமூக சேவையாளர்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் மாத்திரமே சர்வமத வழிபாட்டுத்தலம் முதல் முறையாகத் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-26)

சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 3
யாழ்ப்பாணம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் க.பொ.த சாதரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் 7 பேர் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.
பாடசாலை அதிபர் திருமதி சிறிரதி முருகசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் சிவசிறி வைத்தீஸ்வரக்குருக்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்தப் பாடசாலையில் 8 மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 7 மாணவர்கள் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.
மாணவர்களை மதிப்பளிக்கும் வகையில் சிறுதொகைப் பணம் உட்படநினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள், கல்விச் சமூகத்தினர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-106)

மரவள்ளி உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபாடு

யாழ்ப்பாணம்,ஏப்.3
யாழ்ப்பாண குடாநாட்டில் மரவள்ளி உற்பத்தியில் அதிகமான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மாரி மழையின் தாக்கத்தால் கூடுதலான செய்கையாளர்களின் மரவள்ளிப் பயிர்கள் பாதிக்கப்பட்டன.
மரவள்ளிக் கிழங்குகளுக்குத் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளன. திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ மரவள்ளிக் கிழங்கு 200 ரூபாவாக விற்கப்பட்டது.
விலை அதிகரிப்பைப் பயன்படுத்திக் கூடுதலான செய்கையாளர்கள் மரவள்ளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.
வலிகாமம் கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்களில் உள்ள விவசாய நிலங்களில் மரவள்ளிப் பயிர் உற்பத்தியில் செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ-17)

ஒருவர் இருந்தாலும் மலசலகூடம் கட்டாயம்

புள்ளிகளை விடுத்து அமைத்துத் தாருங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 3

குடும்பத்தில் ஒருவர் மட்டும் இருந்தால் கூட அவருக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், ஒருவருக்கு என்றால் மலசல கூட வசதி தேவையில்லை என்று அவரை விட்டுவிடமுடியாது. இதனால் அந்த நபர் மிகவும் பாதிப்படைவார் என்று பெண்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வடக்குப் பெண்கள் சமாசத்தின் கலந்துரையாடலிலேயே இந்தக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பெண் ஒருவர் தெரிவித்ததாவது;

புள்ளிகள் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டே வீட்டுத் திட்டங்கள், மல சல கூட வசதிகள் வழங்கப்படுகின்றன. ஒரு குடும்பத்தில் இருவர் மட்டும் தான் உள்ளனர் என்றால், அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எமது கிராமத்தில் ஒரு குடும்பத்தில் இருவர் மட்டுமே உள்ளனர். அவர்கள் தினமும் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று மலங் கழிக்கின்றனர்.

இந்த அவல நிலை யாருக்கும் வரக்கூடாது. வீடு இல்லை என்றால் கூட பரவாயில்லை, மலசலகூடம் இல்லை என்றால் என்னசெய்யமுடியும். அவர்கள் மிகவும் வறுமைப்பட்டவர்கள் ஒவ்வொருநாளும் காலையில் எழுந்த வுடன் வீடுவீடாகச் செல்கின்றனர்.

இதைப் பார்த்தால் அழுகைதான் வரும். அவர்கள் என்ன பாவம் செய் தார்கள், மிருகங்களைப்போன்று திரி கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு கட்டாயம் மலசலகூடவசதிகள் ஏற்படுத் தப்படவேண்டும். அதற்கான உத்தர வாதம் வழங்கப்படவேண்டும் என்ற னர்.

அந்தப் பெண்ணின் கோரிக்கையை கேட்ட நிகழ்வில் கலந்து கொண்ட பல ரும் கைதட்டி, ஆதரவு தெரிவித்த னர். நிகழ்வில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் அந்தக் கோரிக்கையை வரவேற் றார்.

அப்படிப்பட்டவர்களுடைய விவரங்கள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு உரியவர்களுடன் பேசுவோம் என்றும். மலசலகூட வச திகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என் றும் தெரிவித்தார். (க-21)

கஞ்சா கடத்தியவர் இனங்காணப்பட்டார்

சாவகச்சேரி, ஏப்.3

பட்டப்பகலில் மூடுந்தில் கஞ்சா கடத்திய வேளையில் தப்பியோடிய நபரை சாவகச்சேரி நீதிமன்றில் அடையாளம் காட்டினார் சாட்சி. நாவற்குழி - பூநகரி வீதியில் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையினர் வாகனச் சோதனையில் ஈடுபட்ட வேளையில் தச்சன்தோப்புப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மூடுந்தில் வந்த சாரதி வாகனத்தை விட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். வாகனத்தைச் சோத னையிட்டபோது அதனுள் மூன்று கிலோ 850 கிராம கஞ்சா இருந்ததைச் சிறப்பு அதிரடிப் படையினர் கண்டுபிடித்தனர். வாகனத்தையும் கஞ்சாவையும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர். சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

தப்பியோடிய மறவன்புலவைச் சேர்ந்த சாரதியை பொலிஸார் கடந்த மாதம் 16ஆம் திகதி கைது செய்து மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அடையாள அணிவகுப்பு நடத்தவும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றில் மூடிய அறையில் கடந்த வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த சாட்சி குறித்த சாரதியை அடையாளம் காட்டினார்.

வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விளக்கமறியல் 14 நாள்களுக்கு நீடிக்கப்பட்டது. (த-9)

தொற்றா நோய்களுக்கான இலவசப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், ஏப்.3

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் தொற்றா நோய்களுக்கான கணினிமயப்படுத்தப்பட்ட இல வச பரிசோதனைகள் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் 35 வய துக்கும் 65 வயதுக்கும் உட்பட இருபாலாருக்கும் பரிசோ தனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடற்திணிவுச் சுட்டி, குருதி அமுக்கம், குருதியிலுள்ள சீனியின் அளவு, கொலஸ்ரோலின் அளவு என்பவை பரிசோதிக்கப்பட்டு இதய நோய்கள் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகிறன.

அத்துடன் புதிதாக தொற்றாநோய்களுக்கு உள்ளானவர்களுக்கு தொடர் சிகிச்சை ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்களுக்கான தொற்றா நோய்களுக்கான கணினிமயப்படுத்தப்பட்ட பரிசோதனைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன. 60பொலிஸ் அலுவலர்கள் பங்கு பற்றி பரிசோதனைகளை மேற்கொண்டனர். (ஜ-9)

ஓட்டிசம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஏப்.3

வடக்கு மாகாணத்தில் 81 பிள்ளைகள் ஓட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் கல்வி கற்கின்றனர் ஆனால் அவர்களின் கற்றல் நடவடிக்கை தொடர்பில் மேற்பார்வை செய்வது இல்லை என ஓட்டிசம் நாள் சிறப்புக் கலந்துரையாடலில் நேற்று சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடல் பெற்றோர்கள், மருத்துவர்கள், சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு இடையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் வங்கி கேட்போர் கூடம் ஒன்றில் "மாதவம்" நிறுவனமும், பிராந்திய சுகாதார நிலையத்தினரும் இணைந்து நேற்று நடத்தினர்.

இதில் கலந்து கொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டதாவது:

ஓட்டிசம் என்பது நோய் நிலமை இல்லை. அது நரம்பு மற்றும் மூளையின் செயற்பாடுகள் சீரின்மையால் வரக்கூடிய விளைவாக கருதப் பட வேண்டும். இந்த குறைபாடு உள்ளவர்களை பராமரித்தல், சிகிச்சை வழங்கல், பயிற்சி வழங்கல் போன்றவற்றை வழங்கும் போது காலப் போக்கில் அவ ற்றைக் கட்டுப் பாடாக வைத்திருக்கலாம். இதற்கு இங்கு "மாதவம்" நிறுவனம் ஒன்று தான் பிராந்திய சுகாதார நிலையத்தின் கீழ் செயற்படுகிறது.

வடக்கு மாகாணத்திலே உள்ள பாடசாலைகளில் 139 ஆசிரியர்கள் இதற்காக பயிற்றப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு மேலதிக படியும் வழங்கப்பட்டு வருகிறது. பாடசாலைகளில் 81 மாணவர்கள் ஓட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். இவர்களுக்கு சிறப்பான பயிற்சிகளுடனான கல்வி முறை வேண்டும். ஆனால் தற்போது இந்த குறைபாட்டால் பாதிக்கப் பட்ட மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் எந்த அளவில் நடக்கிறது என்று மேற்பார்வை செய்வது குறைவு. அதிகாரிகளும் குறைவு. சட்டத்தின் நெருக்கடிக்காக இந்தக் குறைபாடுள்ள மாணவர்களை பாடசாலைகளில் வைத்துள்ளார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது - என்றனர். (க-7)

வட்டியில்லாக்கடனை வழங்கியது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

சாவகச்சேரி,ஏப்.3

மாதர் சங்கத்துக்கு நன்கொடையாகக் கிடைத்த நிதியைச் சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கு வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ளது சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம். கொழும்பு இந்து மகளிர் சங்கத்தால் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

சிறப்பாகச் செயற்படும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங் களைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்களை விருந்தினர்களாக அழைத்து மதிப்பளித்ததுடன் அவர்களுக்கு நிதியையும் வழங்கியிருந்தனர்.

வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை சங்க உறுப்பினர்களின் சுய தொழில்களை ஊக்குவிக்க பிரதேச செயலர் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவலரின் ஒப்புதலுடன் 11 அங்கத்தவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை சுழற்சி முறைக் கடனாக அண்மையில் வழங்கினர்.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு இந்து மகளிர் சங்கத்தின் தலைவி திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்ம நாதன், ஆலோசகர் திருமதி யமுனா கணேசலிங்கம், கொழும்பு மகளிர் வர்த்தகர் சங்கத் தலைவி மற்றும் உறுப்பினர்கள் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கடன் தொகைகளை அங்கத்தவர்களுக்கு வழங்கினர். யாழ்ப்பாணத்தில் பல சிறுதொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தமுடியாமல் உள்ளதால் தொழில் முயற்சியில் ஈடுபடுவதில்லையென அறியமுடிகிறது. எந்தவொரு பெண் சுயதொழில் முயற்சியாளரும் தமது உற்பத்திப் பொருள்கள் தொடர்பாக எமது சங்கத்துடன் தொடர்பு கொண்டால் அவற்றை சந்தைப்படுத்தல் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கொழும்பு மகளிர் வர்த்தக சங்கத் தலைவி தெரிவித்தார். (ஜ-9)

மக்களின் நலன் கருதி திட்டங்களைச் செயற்படுத்துக

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திலீபன் தெரிவிப்பு

அச்சுவேலி, ஏப் 3

கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்ட ஊரெழுச்சி ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்கும் பொது நிறுவனங்கள் கிராமங்களின் வளர்ச்சி மற்றும் திட்ட வேலைகளின் நீண்டகால பயன்பாட்டைக் கருத்தில் கொண்டும் நேர்மையான முறையில் நிறைவுசெய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இராசதுரை திலீபன் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் ஊரெழுச்சி வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கோடு நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்ட வேலைகளின் ஒப்பந்தம் கேள்வி கோரல் இன்றி பொது அமைப்புக்களுக்கு வழங்கப்படுகின்றது. பொது அமைப்புக்கள் லாபநோக்கை கருத்தில் கொள்ளாமல் வேலைகளை நேர்மையான முறையில் உரிய காலத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

கிராம மட்டத்தை பொது அமைப்புகளின் செயற்றிறன், தலைமைத்துவம், வள வசதி என்பனவற்றை மேல்நிலைப்படுத்தும் நோக் கோடு ஒப்பந்த வேலைகள் கையளிக்கப்படுகின்றன.

ஒப்பந்த வேலைகளை நேர்மையான முறையில் உரிய காலப்பகுதியில் நிறைவு செய்யும் அமைப்புகளுக்கு அவற்றின் தர நிலைக்கு அமைய மேலும் வேலைகள் வழங்கப்படலாம் - என்றார். (ஜ-11)

கற்றாளைச் செடியுடன் நான்கு பேர் கைது

மன்னார்,ஏப்.3

வங்காலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கற்றாலம் பிட்டி என்னும் இடத்தில் கற்றாளைச் செடிகளை பிடுங்கி குவித்துக் கொண்டிருந்த போது வங்காலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபர்கள் நான்கு பேரை கைது செய்து 469 கிலோ கற்றாளைச் செடிகளை மீட்டுள்ளனர்.

கற்றாளைச் செடிகளை பிடுங்கிய சந்தேக நபர்கள் மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர்கள். 23 தொடக்கம் 36 வயதுடையவர்கள் இவர்கள் இன்றையதினம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல விதமான நோய்களை குணமாக்கும் சக்தி கொண்ட இந்த் கற்றாளைச் செடிகள் அழிந்தும். அழிக்கப்பட்டும் வருகிறன. இதனை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் எந்த ஒரு நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-213)

முல்லைத்தீவுக்குச் சென்ற பன்னாட்டு நெருக்கடிகள் குழு

முல்லைத்தீவு,ஏப் .3

பன்னாட்டு நெருக்கடிகள் குழுவின் இலங்கைக்கான திட்டப்பணிப்பாளர் உள்ளிட்டோர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கான பன்னாட்டு நெருக்கடிகள் குழுவின் பணிப்பாளர் அலன் கீனன் தலைமையிலான குழுவினர் முன்னதாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 754 ஆவது நாளாக போராட்டம் மேற்கொண்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்ட பந்தலுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளனர்.

தொடர்ந்து கேப்பாபிலவு மண்ணில் தங்கள் வாழ் இடங்களை மீட்க போராடி வரும் மக்களை சந்தித்து அவர்களின் நிலைமையை கேட்டறிந்து கொண்டு முல்லைத்தீவு மண்ணில் இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் சென்று நிலைமைகளை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (க-ரி3)

இல்ல விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு,ஏப் 3

குமுழமுனை கதிரவன் முன்பள்ளி, பேதுரு முன்பள்ளி, கரடிகுன்று முன்பள்ளி ஆகிய மூன்று முன்பள்ளிகளதும் இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த 29 ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு குமுழமுனை கதிரவன் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் ம. ரகுதீபனும், சிறப்பு விருந்தினர்களாக குமுழமுனை பங்குத் தந்தை அருட்பணி ப. சுமன் அடிகளாரும், குமுழமுனை அம்மன் ஆலய பூசகரும் கலந்து கொண்டனர். (க-222)

வடக்கு மாகாண

போக்குவரத்து அதிகார சபை தன்னிச்சையான செயற்பாடு

ஆளுநரும் கைவிட்டால் போராட்டம் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 3

வடக்கு மாகாணத்தில் உள்ள போக்குவரத்து அதிகார சபையின் தன்னிச்சையான செயற்பாட்டால், வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

2018இல் போக்குவரத்து அதிகார சபையின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக நான்கு நாள்கள் பணிப்புறக்கணிப்பு நடத்தி இணக்கப்பாடுஎட்டப்பட்டது.

அரச அலுவலர்கள் மற்றும் வெளிநாட்டுக் குடியுரிமையுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட வழி அனுமதிப் பத்திரங்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறிய நிலையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிநாட்டுக் குடியுரிமையுள்ளவருக்கு வழி அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளார்கள்.

வழி அனுமதிப்பத்திரக் கட்டணம் 7ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 5ஆயிரம் ரூபாவாகவும், லொக்சீற் காட் 750 ரூபாவிலிருந்து 500 ரூபாவாகக் குறைக்க வேண்டும் என்று எடுக்கப்பட்ட தீர்மானம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கேப்பாபிலவு மக்களுக்கு போக்குவரத்து வழி யனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு மன்னாருக்கான பேருந்து வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தைத் தாண்டி இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகள் கிராமங்களுக்குச் செல்வது நிறுத்தப்படவேண்டும்.

வழி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வழித்தடங்களின் அடிப்படையில் பேருந்துகள் பணியில் ஈடுபடவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதுவரை அவை நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும் ஒரு பேருந்து பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதனைக் கவனத்தில் எடுத்து தீர்வைப் பெற்றுத் தருமாறு கடந்த 31ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனைச் சந்தித்துக் கடிதம் வழங்கினோம். இது தொடர்பில் ஒருசில நடை முறைகளை கொண்டு வருவதாக ஆளுநர் தெரிவித்திருந்தார்.

தற்போதும் வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபை சில தன்னிச்சையான செயற்பாடுளை முன்னெடுத்து வருகிறது.

இனியும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், போராட்டம்தான் என்று முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (த-ரி3)

முச்சக்கரவண்டிளரிப்பு

கிளிநொச்சி, ஏப் 3

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி இனந் தெரியாதவர்களால் தீயிடப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது .

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பனிக்கயடிப் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த முச்சக்கரவண்டி நேற்றுமுன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களால் .தீயிடப்பட்டுள்ளதாகவும் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள துடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (க-6)

மன்னார் மறைமாவட்ட

மறை ஆசிரியர்களுக்கு தவக்கால ஞானஒடுக்கம்

மன்னார், ஏப். 3

மன்னார், வவுனியா மறைமாவட்டத்திலுள்ள மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை மன்னார் மடுத் தலத்தில் தவக்கால ஞானவொடுக்கம் இடம்பெற்றது.

அருட்பணி கி.அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் தலைமையில் ஞானவொடுக்கம் நடைபெற்றது. வளவாளராக அருட் சகோதரர் நிக்கலஸ் கீசோக் கலந்து கொண்டதுடன் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 46 பங்குகளிலிருந்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ம-60)

உயிர் அச்சுறுத்தலாம்

முல்லைத்தீவு,ஏப் 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ம.தொம்பப்பிள்ளை தனிப்பட்ட ரீதியில் தனக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த 31 ஆம் திகதி முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக தன்மீது தாக்குதல் நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தன்னை அச்சுறுத்தும் வகையில் ஒருவர் செயற்படுவதாகவும் இதில் இருந்து தன்னையும் தனது வீட்டையும் பாதுகாக்க வேண்டும் என கோரி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளார். (க-ரி3)

கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சுவிஸ் ஈழவிழுதுகள் அறக்கட்டளையின் ஆறாவது அகவை தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுவிஸ், லண்டன்,ஜெர்மனி,கனடா,சுவீடன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்ட ஈழ விழுதுகள் அறக்கட்டளை நிலையம். ஆறாவது ஆண்டில் தனது சேவையை வழங்கும் முகமாக மன்னார் இராசமடு முன்பள்ளி சிறார்களுக்கான கற்றல் உபகரணங்களை கடந்த 31ஆம் திகதி காலை 10.30 மணியளவில் வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பிரபா நந்தன், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஞானராஜ் சோசை, மன்னார் உப்பு கூட்டுத்தாபனத் தலைவர் அன்ரனி மார்க், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-213)

சிறுமியை பாலியல் கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, ஏப். 3

முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய சந்தேகத்தில் இளைஞர்கள் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது, இரண்டு இளைஞர்கள் சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியுள்ளனர். சிறுமி நடந்த சம்பவத்தை உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டையடுத்து இளைஞர்களை நாம் கைது செய்துள்ளோம். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. சிறுமியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார் - என்றனர்.

(ஒ.க.ரி3)

சிறுமியைத் துன்புறுத்திய குற்றச்சாட்டில் தந்தை கைது

புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப். 3

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில், சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

14 வயது சிறுமிக்கு அவரது தந்தை அடிக்கடி பாலியல் துன்புறுத்தல் கொடுத்து வந்துள்ளார். சிறுமி அயல் வீட்டில் இதன் காரணமாக தங்கியிருந்துள்ளார். அயலவர்கள் ஊடாக சிறுவர் நன்னடத்தை அலுவலரின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் ஊடாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்ட பொலிஸார், கடந்த 30 ஆம் திகதி தந்தையைக் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ஒ.க.ரி3)

பொறிக்கடவை அம்மன் ஆலயத்துக்கு மின்வழங்கல்

கிளிநொச்சி, ஏப். 3

கிளிநொச்சியில் வரலாற்று சிறப்பு மிக்க 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த உருத்திரபுரம் பொறிக்கடவை அம்மன் ஆலயத்துக்கு கடந்த 28 ஆம் திகதி மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (க)

படையினரின் ஏற்பாட்டில் தமிழ்-சிங்களப் புத்தாண்டு

முல்லைத்தீவு, ஏப் 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் - சிங்களப் புத்தாண்டு நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி பெறுமதியான பரிசில்களை தட்டிச் செல்ல முடியும் என்று பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

சிறப்பு விளையாட்டுக்களும் பாரம்பரிய விளையாட்டு கலையம்சங்கள், ஈருருளி ஓட்டப்போட்டி, ஆண்கள் பெண்கள் மரதன் ஓட்டப்பந்தயம், ஆண்கள் பெண்கள் வழுக்கு மரம் ஏறுதல், தலையணையடிப் போட்டி, உறியடித்தல் விநோத உடை, கோலப்போட்டி, கயிறிழுத்தல் ஆண்கள் பெண்கள் என்று பல்வேறு விளையாட்டுக்களுடன் இரவு இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது. (க-ரி3)

மின்தடை நேரத்தில் நூதனமாகத் திருட்டு

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு மின்தடை நடைமுறையில் உள்ள நேரத்தைப்பயன்படுத்தி திட்டமிடப்பட்ட திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பஜார் வீதியிலுள்ள வியாபார மொத்த விற்பனை நிலையம் மற்றும் தங்க நகை அடகுச்சேவை நிலையத்தில் இரவு கூரையின் மேல் பகுதியால் உள் நுழைந்த திருடர்கள், தங்க நகை அடகுச் சேவை நிலையத்துக்குள் சென்று அங்கிருந்த தங்க நகைகளை மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. (க)

வவுனியாவில் அதிக வெப்பம் மயக்கமுற்று வீழ்ந்த முதியவர்

வவுனியா, ஏப். 3

வவுனியாவில் கடந்தசிலநாள்களாக அதிகபட்ச வெப்பநிலை நிலவிவருகின்றமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

காலை 11 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரையான இடைப்பட்ட நேரத்தில் வவுனியாவில் கடுமையான வெப்பநிலை நிலவிவருகின்றது.

இந்த நிலையில் கடந்த 31 ஆம் திகதி 37.9 செல்சியஸ் வெப்பநிலை வவுனியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இதேவேளை நேற்றுமுன்தினம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கடும் வெயில் காரணமாக வீதியில் நடந்து சென்ற முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் அவசர நோயாளர் காவுவண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)

கால்நடைப் பண்ணையாளர்களுக்கு கால்நடை மருத்துவர் அறிவுறுத்தல்

மன்னார், ஏப். 3

பண்ணையாளர்கள் கால்நடைகளைப் பராமரித்தல் மற்றும் இறைச்சியாக்குதல் போன்றவற்றில் உள்ள நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை மன்னார் கால்நடை வைத்தியர்கள் சார்பில் முருங்கன் கால்நடை வைத்தியர் சி. பி. வின்சன்ட் தெரிவித்தார்.

பண்ணையாளர்கள் தங்களது கால்நடைகளைப் பதிவு செய்து ஒவ்வொரு கால்நடைகளுக்குமான உரிமைப்பத்திரம் பெற்று தம்முடன் வைத்திருக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலங்களில் தொற்று நோய்களுக்கு எதிராக இலவசமாக வழங்கப்படும் தடுப்பு மருந்தேற்றல் கால்நடைகளுக்கு வழங்குவதை உறுதிசெய்தல்வேண்டும்.

கால்நடைகளை விற்கும் போதும் வாங்கும் போதும் கால்நடைகளுக்கான உரிமப்பத்திரம் முறைப்படி அரச கால்நடை வைத்தியர் முன்னிலையில் உரிமம் மாற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இறைச்சிக்காக வெட்டப்படும் நோக்குடன் கொள்வனவு செய்யப்படும் கால்நடைகள் உறுதிச் சிட்டை மற்றும் சுகாதாரச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் இன்றி வெட்டப்படுதல் விலங்குச் சட்டத்துக்கு முரணானது ஆகவே அவை முற்றாக தடைசெய்யப்படும்.

ஒவ்வொரு மாதமுடிவிலும் இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற கால்நடைகள் தொடர்பான விவரங்கள் உறுதிச் சீட்டுகள், சுகாதாரச் சான்றிதழ்கள், அப்பிரதேச அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவற்றை உள்ளூராட்சி திணைக்களம் கருத்திற் கொண்டு செயற்படுத்த முன்வர வேண்டும். உள்ளூராட்சி திணைக்களங்கள் கால்நடைகளை வெட்டுவதற்கு முன்னரான முன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று மன்னார் மாவட்ட அரச கால்நடை முருங்கன் பிரிவுக்குப் பொறுப்பான சி. பி. வின்சன்ட் தெரிவித்தார்.

(க-213)

முல்லைத்தீவில் மக்கள் வங்கி கிளை திறப்பு

முல்லைத்தீவு, ஏப் 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரப்பகுதியில் சொந்த கட்டடத்தில் மக்கள் வங்கியின் முல்லைத்தீவு கிளை நேற்று மக்கள் சேவைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சகல வசதிகளுடனும் மக்களின் வங்கிச் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ளும் நோக்கில், நவீன வசதிகளை கொண்ட வடக்கு மாகாணத்தில் முதல் கிளையாகவும் இலங்கையில் 20 ஆவது கிளையாகவும் முல்லைத்தீவு கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

தவக்கால தியானங்கள்

புதிய தொடக்கம்

உன் குற்றங்களை கார்மேகம் போலும், உன் பாவங்களை பனிப்படலம் போலும் அகற்றி விட்டேன். என்னிடம் திரும்பிவா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்' (எசா:44:22).

கடவுள் தனது அளப்பெரிய இரக்கத்தால் திருமுழுக்குப் பெற்ற பிறகு நாம் செய்யும் பாவங்களுக்கு ஒப்புரவு என்னும் அருள் அடையாளத்தை நிறுவியுள்ளார். இவ்வருள் அடையாளம் ஓர் உயிர்ப்பு அனுபவம் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் நாம் இறந்து போயிருந்தோம். இப்போது உயிர் பெற்றுள்ளோம்.

மீண்டும் கடவுளை நோக்கி நமது புனிதப் பயணத்தை தொடர்கிறோம். 'அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த் தெழுவோம்'(உரோ:6:5).

'பாவத்தில் விழும் வருந்தத்தக்க நிலை ஓர் ஆன்மாவுக்கு ஏற்பட்டால் வெட்கமும் திகிலும் அடைந்து உடனே தன்னையே தூய்மையாக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்' என்கிறார் புனித பிரான்சிஸ் சவேரியார்.

ஆண்டவரிடம் திரும்பிச் செல்ல காலம் தாழ்த்தாமல், நாள்களை தள்ளிப்போடாமல், இறைவனோடு உறவை புதுப்பித்துக்கொள்ள பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்புப் பெறுவோம்.

ஆண்டவரின் பரிவு எல்லையற்றது. பாவம் என்ற நோயால் நீண்ட நாள்களாக பாதிக்கப்பட்டு அது தொற்றுநோயாக மாறுவதற்கு முன்பே அதன் பாதிப்பிலிருந்து வெளியேற இவ்வருள் அடையாளம் உதவுகிறது. ஒப்புரவு என்னும் அருள் அடையாளம் நாம் கடவுளின் அருளுக்குள் புகவும் கல்வாரியின் கொடையை அதிகப்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது.

இது ஆன்மாவை சுகப்படுத்துவதற்கும், காயங்களை குணப்படுத்துவதற்கும், பாவ வாழ்வை கடந்து மீண்டும் இறைவனின் இல்லம் திரும்புவதற்கும் பயன்படும் மருந்தாகும். இது புதிய வாழ்வை தொடங்குவதற்குரிய வாய்ப்பாகும். இது ஒரு இரண்டாம் திருமுழுக்காகும்.

இந்த வருட பாதீட்டுக்கு

ஆதரவு வேண்டுமெனில் உடன்பாட்டுக்கு வரவும்!

முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 3

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவது குறித்து அழுத்தம் கொடுக்கும் வகையில் அரசுடன் உடன்பாடு ஒன்றை மேற்கொண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்க சிறுபான்மையினக் கட்சிகள் முன்வருவதே சாலச் சிறந்தது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், மாகாணங்களில் ஆளுநர் மூலமாக ஆட்சியை நடத்துவது ஜனநாயகச் செயற்பாடு அல்ல என்றும் சுட்டிக்காட்டி நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரை வரவேற்கத்தக்கது.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பது தொடர்பாகச் சிறுபான்மை கட்சிகளான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி போன்ற சிறுபான்மையினக் கட்சிகளும், மக்கள் விடுதலை முன்னணி உட்பட முக்கிய கட்சிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன. அரச தலைவர் இந்த விடயத்தில் அதிக கரிசனை காட்டிய போதும் இந்த விடயம் காலதாமதத்தை எதிர்கொண்டு வருகின்றது.

சட்டதிருத்தத் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றில் தாக்கல் செய்வதன் மூலமாக தலைமை அமைச்சர் நினைத்தால் ஒரே நாளில் இதற்கான தீர்வைப்பெற முடியும். தேர்தல் சட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற போர்வைக்குள் இரவோடு இரவாகசிறுபான்மையினரைப் பாதிக்கும் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்த அரசுக்கு இதைச் செய்வதில் தயக்கம் ஏற்பட்டிருப்பது பல்வேறு ஜயங்களைத் தோற்றுவிக்கின்றன.

பாதீட்டை நிறைவேற்ற கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்திருக்கும் நிலையில் தமது ஆதரவை வழங்க முன்வரும் சிறுபான்மையினக் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவது தொடர்பில் அரசுடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசதலைவர் முறைமையை நீக்க, அதிகாரங்களைப் பகிர்ந்து, தேர்தல் முறைமையை ஜனநாயக முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

இன்று கிழக்கு மாகாணத்தில் சகலவிதமான அபிவிருத்திப் பணிகளும் தேக்கம் கண்டுள்ளன. நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை காரணமாக முக்கிய திட்டங்கள் முடங்கியுள்ளன. வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமம் நிலவுகின்றது. விவசாயம், மீன்பிடிபோன்ற தொழிற்றுறைகள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. இவற்றை நீக்கவேண்டுமாயின் மாகாண சபை உடன் இயங்கவேண்டும் என்றுள்ளது. (த-22)

போதையிலிருந்து விடுதலைக்காக

உறுதிமொழியெடுக்கும் நிகழ்வு இன்றுகாலை

கொழும்பு, ஏப். 3

போதையிலிருந்து விடுதலைப் பெற்ற நாட்டுக்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழியளிக்கும் "சித்திரை மாத உறுதிமொழி" அளிக்கும் நிகழ்வு தமிழ் மொழியில் இன்று காலை 8.32 தொடக்கம் 08.34 வரை இடம்பெறவுள்ளது. சிங்கள மொழியில் உறுதிமொழியளிக்கும் நிகழ்வு இன்று காலை 8.30 தொடக்கம் 8.32 வரை இடம்பெறும்.

அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச சேவையாளர்களும் பொதுமக்களும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரசதலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்த விடயத்தில் பங்குபற்றவுள்ளனர். மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களும் தமது பாடசாலைகளிலிருந்தவாறே சித்திரை மாத உறுதிமொழியுடன் இணைந்துகொள்ளவுள்ளனர். அதற்கமைய 08.34 தொடக்கம் 08.36 வரை சிங்கள மொழியிலும் 08.36 தொடக்கம் 08.38 வரை தமிழ் மொழியிலும் பாடசாலை மாணவர்கள் சித்திரை மாத உறுதிமொழியை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருள் அழிவிலிருந்து நாட்டை விடுதலை செய்து, செளபாக்கியமிக்க இலங்கையை கட்டியெழுப்ப சிறிசேனவின் வழிகாட்டலில் இடம்பெறவுள்ள இந்த தேசிய பணியை மேலும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு இந்த வைபவத்தில் எவ்வித பேதங்களுமின்றி அனைத்து இலங்கையர்களையும் கலந்துகொள்ளுமாறு அரச தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். (த)

அரசியல் கைதிகள் யாருமில்லை

கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஏப். 3

சிறைகளில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று மறுத்துள்ள நீதி அமைச்சர், விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 54 பேருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளின் மீது விரைவில் விசாரணைகள் தொடங்கும் என்று தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்துவரும் தமிழ் அரசியல் கைதிகளைப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் மறுவாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கையில் நீதி அமைச்சர் தலதா அத்துகோரள, அரசியல் கைதிகள் எவரும் இல்லை. விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் சிலர் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (த)

அமெரிக்காவின் படைத் தளம் இலங்கையில் எதுவுமில்லை

அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

இலங்கையுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சிக்கின்றது. ஆனால், இங்கு நிரந்தரமான தளம் எதையும் அமைக்கும் திட்டம் அமெரிக்காவுக்கு கிடையாது என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர இராணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா திட்டமிடுவதாக வெளியாகி வரும் செய்திகள் குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளத்தை நிறுவுவதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை. அவ்வாறான திட்டம், ஒருபோதும் எமது பாதுகாப்பு ஒத்துழைப்பின் அங்கமாக இருக்கவில்லை. எதிர்காலத்தில் இங்கு, அமெரிக்காவின் எந்தவொரு நிரந்தர தளத்தையும் நிறுவுகின்ற திட்டங்கள் எதுவும் கிடையாது.

திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்க வானூர்தித்தாங்கி கப்பல்கள் எதுவும் தரித்து நிற்கவில்லை. எந்த நேரத்திலும், அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இங்கு வரக் கூடியளவுக்கு இலங்கை அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறோம்.

எனினும், வானூர்தித் தாங்கிக் கப்பல்கள் எதுவும் இலங்கைக்கு வரும் திட்டம் எதுவும் இல்லை-என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

ஆள்க் கடத்தல்களைத் தடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு நீடிக்கும்

அமெரிக்க பிரதித் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் ஆள்க்கடத்தல்களுக்கு எதிரான முயற்சிகளுக்கு உதவுவதில், அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடந்த ஆள்க்கடத்தல் தொடர்பான தரவுகளைத் திரட்டுவது தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் ஆள்க்கடத்தல்களைத் தடுப்பதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் 3.5 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது.

ஆள்க்கடத்தல் சம்பவங்களுக்கான தண்டனை பெற்றுக் கொடுப்பது, நீதி விசாரணையைப்பலப்படுத்துவது, ஆள்க்கடத்தல் பற்றிய தகவல்களைத் திரட்டுவது, ஆள்க்கடத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மற்றும் சேவையைப் பெற்றுக் கொடுப்பது ஆகிய நான்கு விடயங்களுக்கு இந்த நிதி செலவிடப்படுகிறது.

ஆள்க்கடத்தல்களைப் பற்றிய தரவுகளை அடையாளம் காணும் திட்டம் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

கல்வி அமைச்சின் செயலர் ரணசிங்க கடமையேற்றார்

கொழும்பு, ஏப். 3

கல்வி அமைச்சின் புதிய செயலராக நிஹால் ரணசிங்க நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிகழ்வுக்குக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பாகவும் அரச நிர்வாகத் துறை தொடர்பாகவும் பட்டம் பெற்ற நிஹால் ரணசிங்க, 27 வருடங்கள் நிர்வாகச் சேவையில் பணியாற்றி வருகின்றார். 1991 ஆம் ஆண்டு குருநாகல் மாவட்ட உதவிச் செயலராக நியமனம் பெற்ற நிஹால் ரணசிங்க, வடமேல் மாகாணத்தின் உதவி செயலராகவும் மாகாணக் கைத்தொழில் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். கல்வி அமைச்சின் செயலராக கடமைகளைப் பொறுப்பேற்ப தற்கு முன்னர் குடிவரவு குடியகல்வு நிர்வாகியாகவும் சேவையாற்றியுள்ளார் என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

மாகாண, உள்ளூராட்சி சபைகளை இயக்க கையிருப்பில் நிதி இல்லை

தலைமை அமைச்சர் எடுத்துரைப்பு

கொழும்பு, ஏப். 3

மாகாண சபைகள், நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அபிவிருத்திசெய்ய எதிர்க் கட்சியினருக்கு விருப்பமில்லை. அதனால்தான் கடந்த 28ஆம் திகதி நாடாளுமன்றில் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் செலவீடுகள் பற்றிய பாதீடு விவாதத்தில் எதிராக வாக்களித்து அதனைத் தோற்கடித்தனர். அதனால் அந்த நிறுவனங்களை ஏப்ரலின் பின்னர் நடத்துவதற்கு நிதி இருப்பில் இல்லை என்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட விளையாட்டுத் தொகுதி அமைக்க அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று தலைமை அமைச்சர் ஊடகப் பிரிவு விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சஜித் பிரேமதாச மாவட்ட அபிவிருத்திக்காகப் பல முயற்சிகளை எடுத்து வருகின்றார். அதற்காக எம்மிடம் பல வேண்டுகோள்களைத் தொடர்ந்து விடுத்து வருகின்றார். இவ்வாறே கிராமிய அபிவிருத்திகளுக்காக பல திட்டங்களை முன்னெடுக்கிறோம். அம்பாந்தோட்டை முதலீட்டு வலயம் பன்னாட்டு வியாபார கேந்திர நிலையமாக மாற்றம் பெறவுள்ளது.

சஜித் பிரேமதாச வரும்வரை இங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறாதது ஏன்? அவர்கள் யானைகள் வாழ்ந்த காடுகளிலிருந்து அவற்றைத் துரத்திவிட்டு 'பன்னாட்டுக் கிரிக்கட் மைதானம்" எனும் பெயர்ப் பலகையைப் பொருத்தினார்கள். எனினும் பன்னாட்டுக் கிரிக்கட் போட்டிகளை நடத்த முடியாதுள்ளது. - என்றார். (த)

வலயப் பணிப்பாளர் பெருந் தொல்லை கீழ்நிலை அதிகாரிகள் போர்க்கொடி!

ஆவணங்களை மீளப்பெறுமாறு பணிப்பு

தீவக வலயக் கல்விப் பணிப்பாளரின் தொல்லைகளைத் தாங்க முடியவில்லை என்றும் அவரிடமிருந்து தமது ஆவணங்களைப் பொறுப்பேற்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். அதனையடுத்து உதவிக் கல்விப் பணிப் பாளர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரியர்களை காரைநகர் கோட்டத்துக்குத் தற்காலிகமாக இணைத்து வலயக் கல்விப் பணிப்பாளர் மீது விசாரணை நடத்துமாறு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட முற்பகுதியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீவகக்கல்வி வலயப் பணிப்பாளரின் பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரிடமும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரிடமும் முறைப்பாடு செய்திருந்தோம் என்று சங்கம் தெரிவித்தது.
அதனையடுத்து வலயக் கல்விப் பணிப்பாளர், தங்களை அச்சுறுத்தி இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு எதிராகக் கையொப்பம் பெற்று ஆளுநரிடம் முறைப்பாடு செய்திருந்தார் என்று உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவிக்கின்றனர்.
அவ்வாறிருந்தும் வலயக் கல்விப் பணிப்பாளரின் தொல்லை தாங்க முடியவில்லை என்றும் அதனால் அவர்கள், இன்று (நேற்றுமுன்தினம்) விடுமுறை அறிவித்துவிட்டு ஆளுநர் அலுவலகத்தில் முறையிட்டு தமது கோவைகளையும், ஆவணங்களையும் பாதுகாத்துத் தருமாறு முறைப்பாடு செய்து நீதி கோரினர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.
இது பற்றி உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர், கல்வி அமைச்சின் செயலருக்கு அறிவுறுத்தியிருந்தார். அதனையடுத்து பாதிக்கப்பட்டதாகக் கூறும் அதிகாரிகளைத் தற்காலிகமாக காரைநகர் கோட்டத்தில் இணைத்து உடனடியாக வலயக் கல்விப் பணிப்பாளர் மீது விசாரணை நடத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சின் செயலர் பணித்துள்ளார். குறித்த அதிகாரிகளின் கோவைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார். என்று சங்கம் மேலும் தெரிவித்தது.
குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டதை மாகாணத் திணைக்களமும் உறுதிப்படுத்தியது. (த)

மானிப்பாய் வாள்வெட்டு; மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம்.ஏப் 3
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவாலி கொத்துக்கட்டி வீதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மேலும் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இரண்டு உந்துருளிகளில் முகங்களை மூடிக்கட்டியவாறு நுழைந்த 5 பேர் கொண்ட கும்பல் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.
விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், உடுவில் பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவரைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்தனர்.
அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நவாலி அட்டகிரியைச் சேர்ந்த மேலும் இருவர் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டனர்.
விசாரணையின் பின்னர் சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ஜ-106)

பன்னாட்டுத் தரத்தில் அமைந்த பன்முக போக்குவரத்து மையம்

கொழும்பு, ஏப். 3
இலகு தொழிநுட்ப போக்குவரத்துத் துறைக்கு வழிவகுக்கும் முகமாக பன்னாட்டுத் தர பெறுபேறுகளுக்கமைய அமைக்கப்பட்ட கொட்டாவ- மாகும்புர பன்முக போக்குவரத்து நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அதைத் திறந்து வைத்து உரையாற்றினார். இது தொடர்பில் அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் அமைக்கப்பட்ட இந்தப் போக்குவரத்து நிலையத்தினூடாக மக்களுக்குப் பேருந்து, தொடருந்து, வாடகை வண்டிகள் உள்ளிட்ட போக்குவரத்துத் தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையும்.
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையினூடாக கொழும்பை நோக்கிவருகின்ற வாகனங்களில் வரும் பயணிகள் இந்த நிலையத்தில் நிறுத்தப்பட்டு தொடருந்து அல்லது பேருந்துகளினூடாகதங்களதுபோக்குவரத்துத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
எல்.ஈ.டி பெயர்ப் பலகைகளினூடாக தொடர்ச்சியாக மக்களைத் தெளிவுபடுத்தல், ஜீ.பி.எஸ் தொழிநுட்பத்தினூடாக தொடருந்து அல்லது பேருந்து இருக்கும் இடத்தைக் கண்டறிவதற்கான வாய்ப்புகள், இணையத்தளத்தினூடாக பிரயாணச் சீட்டு முன்பதிவுகள், தொடருந்திலும் பேருந்திலும் ஒரே பிரயாணச் சீட்டைப் பயன்படுத்தி பிரயாணிக்கக்கூடிய வாய்ப்புகள், தானாகவே பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளும் வசதிகள், உள்ளிட்ட பல வசதிகளை இந்தப் பன்முக போக்குவரத்து நிலையத்தினூடாக பூர்த்தி செய்துகொள்ள முடியும்- என்றுள்ளது. (த)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதன்படி மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளால் வெளியிடப்பட்டுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி
சு.மயூரகி- 9ஏ, ச.கோபிகா- 9ஏ,கு.தர்மீகன்- 9ஏ,ஜெ.றிதுர்சிகா- 9ஏ,பி.சுஜீபன்- 9ஏ, ஞா.கோகுலன்- 9ஏ, உ.சனாதனன்- 9ஏ,சி.சிவன்ஜா- 9ஏ,அ.பானுஜன்- 8ஏபி, கு.மதூசன்- 8ஏபி,சி.மனோஜன்- 8ஏபி,ச.பத்மப்பிரியன்- 8ஏபி,ஜ.சஞ்சயன்- 8ஏபி,க.தீவீசன்- 8ஏபி, சி.டிலக்சனா- 8ஏபி, ரு.பிருந்தா- 8ஏபி, க.சாமந்தி -8ஏபி, க.கவிஸ்ரன்- 8ஏசி, சி.லிகிதரன்- 8ஏசி,ந.விதுசன்- 8ஏசி,கி.செந்தூரன்- 8ஏஎஸ், பி.ரொமேஷ்- 7ஏ2பி, த.ஜேம்சன்-7ஏ2பி, சி.தயானுஜன்- 7ஏபிசி, க.அருணன்- 7ஏபிசி,வ.துஸ்யந்தன்- 7ஏபிசி,சு.துசானி- 7ஏபிசி,ந.சனுஸ்ரன்-7ஏபிசி, பி.யதுசனன்- 7ஏபிஎஸ், த.கஜபானுஜன்- 6ஏ3பி, ர.சோபதர்சன்- 6ஏ3பி,ப.தாமிரன்- 6ஏ3பி,ந.லக்ஷன்- 6ஏ3பி,ச.தரணியா- 6ஏ3பி,ச.சர்வாணி- 6ஏ3பி,பு.அபிநாத்- 6ஏ2பிசி, சி.மிதுஜனா- 6ஏ2பிசி, உ.சோபிகன்- 6ஏ2பிசி, க.அபிர்தன்- 6ஏ2பிசி, வை.சானுகா- 6ஏ2பிசி, ர.ஜனார்த்தன்- 6ஏ2பி, சி.விசாலினி- 6ஏபி2சி, ர.பிதுசன்- 6ஏ2சிஎஸ், ஈ.ரேணுசன்- 6ஏபிசிஎஸ், ப.ஜங்கரன்- 5ஏ4பி, வி.விதுஸ் - 5ஏ3பிசி, ச.சாருஜா- 5ஏ3பிசி, கு.பவித்ராகிதன்- 5ஏ3பிஎஸ், சி.சிந்துஜா- 5ஏ3பிஎஸ், க.கருசனன்- 5ஏ2பி2சி, ஜெ.கிருசிகா- 5ஏ2பி2சி, க.மதுசன்- 5ஏ2பிசிஎஸ், ஜெ.ஜெலக்சன்- 5ஏபி3சி, இ.டிலக்சனா- 5ஏபி2சி.

யாழ்ப்பாணம் நடேஸ்வரக் கல்லூரி
இ.கிருஸ்ணராஜ்-9ஏ, இ.கேசனா- 2ஏ3பி2சி2எஸ்,ஸ்ரீ.கவிப்பிரியா-ஏபி5சிஎஸ், ற.பவிக்கா-பி5சிஎஸ்,த.சஞ்சீவன்-3சி3எஸ்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
கோ.மதுமினா- 8ஏசி, யோ.கீர்த்தனா- 7ஏபிசி, க.கவிப்பிரியா- 6ஏ2பிசி, ஜெ.கஜானன்- 4ஏ2பி3சி,த.தரணிகா-4ஏ2பி2சிஎஸ், கி.நிசாதனா- 3ஏ2பி3சிஎஸ், பூ.யனுசன்- 2ஏ3பி2சிஎஸ், ஞா.பவித்ரா-2ஏபி4சி2எஸ், ச.துவாரகன்- 2ஏ2பி5சி, இ.சீனுஜா- ஏபி4சி3எஸ், ஸ்ரீ.டிசாலினி- ஏ2பி4சி2எஸ், சி.பரணியா- ஏ4பி3சிஎஸ், யோ.சனானன்- ஏபி4சி2எஸ், கு.கஜதாஸ்- ஏ3பி2சிஎஸ், வளர்மதி- ஏ2பி2சி2எஸ், சி.கிருஷ்ணன்- ஏ3பி3சிஎஸ், சி.சிறிகாந்தன்- ஏ5சி2எஸ், ச.இந்துஜன்- 6பி2சிஎஸ்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
த.ஜெமீமா- 6ஏ3பி, தி.இந்துஜன்- 6ஏ2பிசி, சு.பானுஜன்- 5ஏ3பிசி, யோ.லொக்சனி- 5ஏ2பிசிஎஸ், ச.பிதுஷா- 5ஏபி2சிஎஸ், ச.சுமர்தா-5ஏபி2சி,ந.தாட்ஷாஜினி-4ஏபி3சி.

யாழ்ப்பாணம் அச்சுவேலி மத்திய கல்லூரி
ச.ஜதுசன் -9 ஏ, யே.பிரசன்னா- 8ஏ பி, கி.நீரஜன் -8ஏபி, ச.இளங்கீதம்- 6ஏ 3பி, வி.லக்சிகன் -4ஏ4பி, ஸ்ரீ.லாதுசா- 3ஏ 3பி சி 2எஸ், சி.சஜீபன் -3ஏ 2பி 3சிஎஸ், யோ.விந்துஜன்- 2ஏ4பி3சி, ஜெ.றதுசன் -2ஏ3பி3சிஎஸ், வே.சதுஜன் -2ஏபி5சிஎஸ், ப.அனுசியா- 2ஏ4பி3எஸ், ற.மதுசிகா -2ஏ 3பி 3சிஎஸ், ச.மிதுலாளினி- 2ஏபி3சிஎஸ், சு.லக்சா- 2ஏ3பி2சிஎஸ்.

யாழ்ப்பாணம் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்
கே.மதுமிலன் - 9ஏ, கி.நிலானி - 5ஏபி3சி, உ.சாளினி - 5ஏபி2சிஎஸ், ம.பவித்திரன் - 4ஏ2பி2சிஎஸ், இ.திலக்சிகன் - 3ஏ2பி3சிஎஸ், வி.யானுஜா - 3ஏ3பிசிஎஸ், கோ.ஜக்சன் - 2ஏ4பிசி2எஸ், து.சுகிர்தா - 4ஏ2பிசிஎஸ், செ.தமிழ்ச்செல்வன் - 2ஏபி4சிஎஸ், ச.தேனுஜா - 2ஏ2பி3சி2எஸ், சு.இதயசங்கர் - 1ஏ5சிஎஸ், ச.சர்வேஜினி-ஏ2பி2சி3எஸ், பி.மதுஷா - 2ஏ3பிசிஎஸ், ம.கனிஸ்ரா - 2ஏ2பி2சிஎஸ், வி.விஜிபா - ஏ2பி2சி2ஏஸ், ர.பவித்திரா-பி5சி2எஸ், யோ.யதீனா - 4சி3எஸ், சி.றயிந்தா-2சி4எஸ், ச.சாஜகான் - 3சி4எஸ், ச.சோபிதன்-3சி2எஸ்.

யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
வை.தர்சிகா-6ஏ3பி, அஜந்தா-5ஏபி2சிஎஸ், சி.சுகன்யா - 4ஏ2பி2சிஎஸ், சி.சாதுர்ஜா - 3ஏ5ஏசி, பி.திவியா - 3ஏ3பி3சி, க.தனுவந்தி-3ஏ3பி3சி, இ.சிநேகா-2ஏ3பி3சிஎஸ், கு.யுகிர்தன் - 2ஏ3பி2எஸ்2எஸ், வி.வாசுகி - 2ஏ3பி2சிஎஸ், ந.கோபிதன் - 2ஏபி4சி2எஸ்

மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்
பெ.கர்ணிகா- 8ஏபி, க. தர்சிகா- 6ஏ3பி, த.மது ஜன்- 6ஏ3பி, ச.சஜிதா- 5ஏ3பிசி, ப.ளெலிகா- 5ஏ2பிசிஎஸ், அ.டிலக்சன்- 3ஏ2பி4சி, யூ.சுஜி தன்- 3ஏ2பி4சி, அ.நிதர்சினி- 3ஏ3பி2சிஎஸ். அ.டில்சன்- 3ஏ2பி3சிஎஸ், தி.மதீசன்- 3ஏ4பிசி.

அம்பன் அ.மி.த.ம.வித்தியாலயம்
ரி.ரஜீவன்-2ஏ4பி3சி,எஸ்.டனிதா-2ஏ3பி4சி, வி.வினுராஜ்- 2ஏ2பி2சி, எஸ்.கிருசாந்தன்- 3பி4சிஎஸ், கே.நிஷாந்தன்- 3பி4சிஎஸ், ஜே.டினேஸ்- பி3சி3எஸ், எஸ்.பானுசன்- ஏபி4சி2எஸ், ஜே.ஜமீனா-ஏபி4சிஎஸ், கே.சுவின்தனா-2பி5சிஎஸ், வி.விமலினி- ஏ2பி6சி, கே.நிஷான்தா-2ஏ2பி2சி2எஸ், ஜே.செந்துசாளினி- 2பி4சி3எஸ்.

ஆழியவளை சி.சி.ரி.மகா வித்தியாலயம்
எஸ்.அபிசாயினி- 8ஏசி, எஸ்.சகினா- 6ஏ2பிசி, எஸ்.ஸொசிகா- 5ஏ2பிசிஎஸ், ஆர்.ஜனனி- 3ஏ4பிசிஎஸ், ரி.ஈஸ்வரி- 3ஏ3பி2சிஎஸ், வி.நாகதீபன்- பி4சி4எஸ், ஜே.ஜெகதீஸ்- ஏ2பி3சி3எஸ், எஸ்.குபேரன்- ஏ2பி4சி2எஸ், ரி.விதுசன்- ஏ2பி4சி2எஸ்,இ.ரதீஸ்குமார்-ஏ2பி3சி3எஸ், கே.சிறிதரன்- 2சி5எஸ்,ஆர்.பானுஜன்- 2ஏபி5சிஎஸ், ஜே.கிருஷ்ணரூபன்-ஏபி6சி, எஸ்.தனுசன்- ஏ2பி3சி3எஸ், ஜே.மயூகரன்- பி3சி4எஸ், ரி.சிந்துஜன்- ஏ5சி2எஸ், ஏ.அபிரா- சி4எஸ், எஸ்.பிறின்சிகா- ஏ4பி2சிஎஸ், ஜே.றிலோசிகா- 3ஏ2பி3சிஎஸ், எஸ்.சிவாஜினி- 2ஏ5சிஎஸ், எ.ஆன்மிதுசா- 2ஏபி6சி.

கைதடி குருசாமி வித்தியாலயம்
ம.சாளுஜா- 5ஏ2பிசிஎஸ், ச.தேவப்பிரகாஸ்- 2ஏ4பிசி2எஸ், க.பரணிதரன்- ஏபி6சிஎஸ், சு.பவானி-ஏபி4சி2எஸ், இ.ஜெனிதா- 2பி4சி2எஸ், இ.அனீஸ்வரன்- 2பி4சி3எஸ், ந.சந்துஜன்- 5சி3எஸ். இ.சாருஜன்- 4சி4எஸ், சி.மதிவர்மன்- 2சி4எஸ், ச.புவிராஜ்- 2சி4எஸ்.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி
வி.மிதுசன்- 8ஏபி, ஆர்.சாதனா- 7ஏ 2பி, வி.தாரணி- 7ஏபிசி, எஸ்.மதுசன் -7ஏபிஎஸ், என்.கானுசா- 6ஏ 2பி சி, கே.பிரியங்கா- 6ஏபிசி, கே.நிருஜா- 6ஏ2பிசி, வை.கபிலன்- 6ஏ 2பிசி, எஸ்.றினுசா- 5ஏ2பிசி, பி.சாதனுகா -4ஏ5பி, எஸ்.கபின்சா- 4ஏ2பிசிஎஸ்.

கல்லூரி விடுதியில் உள்ளோர்
கே.சங்கீர்த்தனா- ஏபி3சி3எஸ், எஸ்.கபின்சா -4ஏ 2பி சிஎஸ், எம்.பூலோகநாயகி -ஏ 3பி 3சி எஸ், என்.கானுசா- 6ஏ 2பிசி, ஜே.டினோஜா -3ஏ 2பி 3சி, கே.பிருந்தா- 2சி 5எஸ்,பி.கம்சிகா- 2பி 3சி 3எஸ், ஜே.சிமித்திரா -ஏ பி3சி, எஸ்.பிரியங்கா -6ஏ பிசி, வை.லோகசர்வி -ஏபிசி3எஸ், எம்.மகிந்தினி- சி4.எஸ், ஜ.சதுஜா- 2ஏ 3சி 3எஸ் ஜே.லோகிதா- ஏபி2சி3எஸ், வி.கிசோபா -4சி4எஸ்.

மோடியை வீழ்த்துவதே எனது முதல் வேலை

ராகுல் காந்தி திட்டவட்டம்

புதுடெல்லி,ஏப்.3
எதிர்வரும் இந்தியத் தேர்தலில் தனது முதலாவது பணி மோடியைத் தோற்கடிப்பதே என்றார் ராகுல் காந்தி. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்திருக்கும் தருணத்தில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் முதற் கட்டத் தலையாய பணி மோடியைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே. ஜனநாயகத்தையும் அரசியல் சாசனத்தையும் காப்பாற்ற வேண்டியது முதற் கண் அவசியம். இந்தியாவின் சமூக அமைப்பு மற்றும் இந்தியாவின் மதிப்புமிக்க நிறுவனங்களை மோடி அரசு சீரழிப்பதை நாம் முதலில் தடுக்க வேண்டிய தேவை உள்ளது. அதாவது வளர்ச்சி மேம்படவும், பொருளாதாரம் முன்னோக்கிச் செல்லவும் வேலைவாய்ப்புகள் உருவாகவும் அநீதியையும் சமத்துவமின்மையையும் களையவும் நாம் பா.ஜ.காவைத் தோற்கடித்தாக வேண்டும். இதற்காக அனைத்துக் பா.ஜ.காவுக்கு எதிராக ஒன்று திரண்டுள்ளன - என்றார் ராகுல் காந்தி.



மறைந்தார் இயக்குநர் மகேந்திரன்

பிரபாகரனைச் சந்தித்த பெருமைக்குரியவர் வைகோவும் சீமானும் புகழாரம்

'முள்ளும் மலரும்', 'ஜானி' 'உதிரிப்பூக்கள்', 'கை கொடுக்கும் கை' உள்ளிட்ட தமிழ்த் திரையுலகில் மறக்க முடியாத படங்களை வழங்கிய இயக்குநர் மகேந்திரன், உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்றுக் காலமானார். அவருக்குவயது 79. அவரதுமறைவுக் குத்திரையுலகினர், அரசியல்தலைவர்கள்உட்படப்பலரும்இரங்கல்தெரிவித்தனர்.
இதுதொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலர்வைகோவெளியிட்டஇரங்கல் செய்தியில், 'தமிழ்த்திரை உலகில் யதார்த்தஇயக்குநர்எனவர்ணிக்கப்படும்இயக்குநர்மகேந்திரன்தமிழ்ஈழம் சென்று பிரபாகரனைச் சந்தித்த பெருமைக்குரியவர் எனக் குறிப்பிட்டார்.
இயக்குநர் மகேந்திரன் மிகச்சிறந்த தமிழ் உணர்வாளர். சிறந்த எழுத்தாளர். அவரின் கலைத் திறமையைக் கண்டு கவரப்பட்ட நம் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் நேரில் சந்திக்க விரும்பி அழைப்பு விடுத்து இயக்குநர் மகேந்திரனை நேரில் சந்தித்து திரைப்படக் கலை குறித்து விவாதித்து மகிழ்ந்தது குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வு என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானும் தெரிவித்தார். இவர்களுடன்டிடிதினகரன்,மு.க.ஸ்ராலின், தென்னிந்தியத் தயாரிப்பாளர் சங்கம்,மூத்தநடிகர்ரஜினிகாந்மற்றும் நடிகர்கள், இயக்குநர்கள்எனப்பலரும் மகேந்திர னின் மறைவுக் கு இரங்கல் தெரிவித்தனர்.

ஜமால்கொலை விவகாரம் சலுகை அளிக்கிறது சவூதி

வோஷிங்டன்,ஏப்.3
துருக்கியில்உள்ளசவூதித்தூதரகத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரான ஜமாலின் பிள்ளைகளுக்கு(ஆண்கள்இருவர்,பெண்கள் இருவர்) சவூதி அரசு பல்வேறு சலுகைகளை அளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. 4 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆடம்பர வீடுகள் நான்கைச் சவூதித்துறைமுகநகரானஜித்தாவில், ஜமாலின்4பிள்ளைகளுக்கும்கொடுக்கவுள்ளதாகவும், மாதம் ஒன்றுக்கு 10ஆயிரம் டொலர்கள் வீதம் வழங்குவதுடன், பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான வெகுமதிகளும்அவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜமாலின் மூத்த பிள்ளையைத் தவிர ஏனைய 3 பேரும் அமெரிக்காவில் உள்ளதங்கள்வீடுகளைவிற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஜமால்கொலை விடயத்தில் சவூதி மீதே குற்றக் கறை படிந்திருக்கின்றது. இதனால்சவூதிஅரசின்இந்தச்சலுகைகள்குறித்துப்பலவாறான விமர்சனங்கள்எழுந்துள்ளன.

கிம்ஜோங்நாம்கொலைவழக்கிலிருந்து வியட்நாம் பெண்ணும் விடுதலை

கோலாலம்பூர்,ஏப்.3
வடகொரிய அதிபரின் ஒன்றுவிட்ட சகோதரனான கிம் ஜோங் நாம் கொலை வழக்கில் கைதான வியட்நாம் பெண் அடுத்த மாதம் விடுதலை ஆவார் எனப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
கிம்ஜோங்நாம், 2017ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் மலேசியத் தலைநகர்கோலாலம்பூர்வானூர்திநிலையத்தில் இரசாயன வேதிப்பொருள் வீசிக்கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக இந்தோனேஷியாவைச் சேர்ந்த சித்தி ஆயிஷா மற்றும் வியட்நாமை சேர்ந்ததோவன்திகுவோங்ஆகிய 2 பெண்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில்அடைக்கப்பட்டனர்.
அவர்கள் மீதான கொலை வழக்கு நடந்து வந்தது. இந்தோனேஷியப் பெண்சித்திஆயிஷாமீதானகுற்றச் சாட்டுகள் திரும்பப் பெறப்பட்டுக் கடந்த மாதம் அவர் விடுவிக்கப்பட்டார்.
இதன் தொடர்ச்சியாகத் தற்போது தோவன்திகுவோங்மீதானகுற்றச் சாட்டும் நீக்கப்பட உள்ளதாகத் தகவல்வெளியாகியுள்ளது.

இன்றைய நாள்

மேடம்: சுயநலம் கருதி சிலர் உதவ முன்வருவர்.தொழில் வியாபாரத்தில் அதிகம் பணிபுரிந்தால் மட்டுமே எதிர்பார்த்தலாபம்வரும். மாணவர்கள் கவனமுடன் படிப்பதால் தரத்தேர்ச்சி சீராகும்.

இடபம்: புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்க தேவை யான மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

மிதுனம்: மனதில் குழப்பம் வந்து விலகும். குடும்பத்தினருடன் வாக்கு வாதம் பேச வேண்டாம். தொழில் வியா பாரத்தில் பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

கடகம்: உற்சாக மனதுடன் செயல்படு வீர்கள். தொழில்வியாபாரத்தில்போட்டி மறையும். பணவரவு திருப்திகரமாகும். நண்பர்களுடன் பழைய நினைவு களைப் பேசி மகிழ்வீர்கள். குடும்ப விவகாரத்தில்சுமூகத்தீர்வுகிடைக்கும்..

சிம்மம்: சிறு செயலையும் நேர்த்தி யுடன் செய்வீர்கள். தொழில் வியா பாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி நிலை உருவாகும். லாபம் அதிகரிக்கும்.

கன்னி: செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் குறைபாடுகளை உடனடியாகசரிசெய்வது நல்லது.அளவான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

துலாம்: உங்கள் கருத்துக்களை மற்றவர் தவறாக உணர்ந்து கொள்ளலாம். குடும்ப விஷயங்களை பிறரிடம் பேச வேண்டாம்.தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்..

விருச்சிகம்: குடும்ப ஒற்றுமையை பாதுகாக்க முயல்வீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

தனுசு: உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் மதிப்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பைபயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும்.

மகரம்: எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில்வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

கும்பம்: நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

மீனம்: சவால்களை ஏற்று செயல்படுவீர்கள். தொழில்வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்..

இதயன்

புதன் பொய்கை

ஏப்ரல் 03, 2019

@UthayanPrint

தந்தை மகள் இடையே பாசம் இழையோடுகின்ற திரையிசைப் பாடல்கள்!

இராமபுரத்தூர் நிசாந்தன்

தமிழ் சினிமா எமக்களித்துள்ள திரையிசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான பாடு பொருள் கொண்டு அமைந்துள்ளன. மனித வாழ்வியலின் பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டு அந்தத் திரையிசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் அமைவுறுகின்றன என்பதே உண்மை. அத்தகு திரையிசைப் பாடல்கள் பலவும், உறவுகளின் அன்புப் பிணைப்பினை வெளிப்படுத்துபவையாக இழையோடுகின்றன. அம்மாவின் அன்பினை உணர்த்தும் பாடல்கள், அண்ணன் தங்கை பாசத்தை உணர்த்தும் பாடல்கள், நட்பினை உணர்த்தும் பாடல்கள், மற்றும் காதலை வெளிப்படுத்தும் பாடல்கள் என அவற்றைக் கேண்மையுற முடியும். அந்த வகையில் தந்தை மற்றும் மகளுக்கு இடையிலான பாச உணர்வினைக் கொண்டமைந்துள்ள பல பாடல்கள் எமது திரையிசையில் மலர்ந்துள்ளன.

எமக்கு தாய், தந்தை என உறவுகள் இருந்தாலும் பெண் பிள்ளைகள் எனும் போது அவர்களது தந்தையர்களின் மனமகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனலாம். அந்தளவிற்கு தம் மகள் மீது தந்தையர் கொண்டிருக்கும் பாசத்தினை எல்லை போட்டுக் கூறிட முடியாது. தம் மகள் மீது உயிராகவும், அளவு கடந்த அன்பாகவும் இருந்து அவளை வளர்த்தெடுப்பார்கள். அது போலவே பெண் பிள்ளைகளுக்கும் தம் அம்மாவைக் காட்டிலும் அப்பாவின் மீதே அதிக அன்பும், விருப்பமும் இருக்கின்றது என்பதும் உண்மையே. இதை பல குடும்பங்களில் கண்கூடாக நம் கண்ணுற முடியும். இவ்வாறு சிறப்புறும் தந்தை மற்றும் மகளுக்கு இடையிலான பாசம் எனும் உணர்வின் ஊற்றாக பொலிவுறும் ஒரு சில திரையிசைப் பாடல்களை இங்கு கண்ணுறுதல் சிறப்பாகும்.

விஸ்வாசம் கண்ணான கண்ணே...

நடிகர் அஜித்குமார் நடிப்பில் அண்மையில் வெளிவந்த திரைப்படம் விஸ்வாசம். தந்தை மற்றும் மகளுக்கிடையிலான உச்சக்கட்ட பாசத்தினை கொண்டமைந்த திரைப்படம் இதுவாகும். இதில் தந்தையாக அஜித்தும், மகளாக அனிகாவும் நடித்திருப்பார்கள். அந்தத் திரைப்படத்தில் ஓர் அழகிய பாடல் தந்தை மற்றும் மகளுக்கிடையிலான பாசத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. தந்தை மகளை நோக்கிப் பாடுவதாக பாடல் அமைவுறுகின்றது. நாமும் பாடலை கேண்மையுறுவோம் வாருங்கள்.

கண்ணான கண்ணே கண்ணான கண்ணே
என் மீது சாய வா...
புண்ணான நெஞ்சை பொன்னான கையால்
பூப் போல நீவ வா...
நான் காத்து நின்றேன் காலங்கள் தோறும்
என் ஏக்கம் தீருமா..
நான் பார்த்து நின்றேன் பொன் வானம் எங்கும்
என் மின்னல் தோன்றுமா...
கண்ணீராய் மேகம் தூவும் கண்ணீர் சேரும்
கற்கண்டாய் மாறுமா...

நீண்ட காலம் தன் மகளைப் பிரிந்திருந்த தந்தை தன் மகளை கண்டு அவளோடு கதைத்து, அவளுக்கு பாதுகாப்பாக அதுவும் தானே அப்பா என்பதை மகள் அறியாமல் இருக்கும் போதும், அன்பானது உள்ளத்தில் வெளிப்படவே, தன் மகளை கண்ணான கண்ணே என விளிக்கின்றார். மேலும் தன் புண் பட்ட உள்ளத்தினை பொன்னான கரம் கொண்டு நீவிடவே தன் மகளை அழைத்து நிற்கின்றார் தந்தை. அத்தோடு தன் மகளுக்காக நீண்ட காலம் காத்திருந்து, கண்ணீர் வடிக்கின்ற பாசம் கொண்ட தந்தையின் வெளிப்பாடு பாடலில் இழையோடுகின்றது. பாடலில் தொடர்ந்து வரும் பாடல் வரிகளை காணுங்கள்.

அலை கடலின் நடுவே
அலைந்திடவா தனியே
படகெனவே உனையே
பார்த்தேன் கண்ணே...
புதை மணலில் வீழ்ந்தே
புதைந்திடவே இருந்தேன்
குறு நகையை தந்தே
மீட்டாய் என்னை...
மயில் ஒன்றை பார்க்கிறேன்

மழையாகி ஆடினேன்...
இந்த உற்சாகம் போதும்
சாக தோன்றும் இதே வினாடி...

ஆகா! அருமை. அலைகடலில் அலைந்திடும் தன்னை மீட்டிடும் படகாக உன்னைக் கண்டேன் எனவும், புதைமணலில் வீழ்ந்து புதைந்திட இருந்த தன்னை சிறு புன்னகை சிந்தி மீட்ட வள் நீ என்றும் அந்த பாசக்கார தந்தை மகளைப் பார்த்துப் பாடுகின்றார்.

மேலும் தன் மகளை மயில் எனக் கூறி அவளைக் கண்டு தான் மழையாக ஆடுகின்றேன் என உருகும் தந்தையின் அன்பின் ஆழத்தை காண முடிகின்ற தல்லவா?

தெய்வத் திருமகள் ஆரிரோ ஆராரிரோ...

நடிகர் விக்ரம் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் தெய்வத் திருமகள். இந்தத் திரைப்படத்தில் விக்ரமின் மகளாக பேபி சாரா நடித்திருப்பார். தந்தைக்கும், மகளுக்கும் இடையில் உருவெடுக்கும் அன்பின் ஆழத்தினை திரைப்படத்தில் கண்ணுறலாம். திரைப்படத்தில் அத்தகு தன்மையினை புலப்படுத்தும் அழகியதொரு அப்பா மகள் பாடல் இடம்பெற்றுள்ளது. இதுவே அந்தப் பாடல்.

ஆரிரோ ஆராரிரோ இது தந்தையின் தாலாட்டு
பூமியே புதிதானதே இவள் மழலையின் மொழி கேட்டு ஓ.....
தாயாக தந்தை மாறும் புது காவியம் ஓ...
இவன் வரைந்த கிறுக்கலில் இவளோ உயிர் ஓவியம்...
இரு உயிர் ஒன்று சேர்ந்து இங்கு ஓர் உயிர் அது தே...
கருவறை இல்லை என்ற போதும் சுமந்திட தோணுதே...
விழியோரம் ஈரம் வந்து முட்டி மோதுதே...





தாய் இல்லாது போகும் தன் மகளுக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து அன்பைக் காட்டிடும் தந்தையை மேற்போந்த பாடல் வரிகள் அழகுறக் காட்டி நிற்கின்றன. இவை மட்டுமன்றி இந்தப் பாடலில் இடம்பெறும் ஏனைய வரிகளையும் நோக்குவோம்.

முன்னம் ஒரு சொந்தம் வந்து
மழை ஆனதே
மழை நின்று போனால் என்ன
மரம் தூறுதே
வயதால் வளர்ந்தும் இவன் பிள்ளையே
பிள்ளைப் போல் இருந்தும்
இவள் அன்னையே

இது போல் ஆனந்தம் வேறில்லையே ஆகா, அருமையான தந்தை மகள் பாசம் அல்லவா?

அபியும் நானும்
வா வா என் தேவதையே...

தந்தை மகள் பாசத்தின் வெளிப்பாடாக அமைந்த திரைப்படம் அபியும் நானும். நடிகர் பிரகாஸ்ராஜ் தந்தையாகவும், நடிகை திரிஷா மகளாகவும் நடித்திருந்த அருமையான திரைப்படம் இதுவாகும். அந்தத் திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள தந்தை மகள் பாசத்தின் பிரதிபலிப்பாக அமையும் அழகிய பாடல் இது தான்.

வா வா என் தேவதையே பொன் வாய் பேசும்
தாரகையே
பொய் வாழ்வின் பூரணமே பெண் பூவே வா...
வான் மிதக்கும் கண்களுக்கு மயிலிறகால்
மையிடவா
மார் உதைக்கும் கால்களுக்கு மணிக்கொலுசு
நானிடவா.....

தன் மகளை தேவதை, தாரகை, பூரணமே, பெண் பூவே எனப் பலவாறு புகழ்ந்துரைக்கின்ற தந்தையின் பாச உணர்வினைக் காண முடிகின்றது. அத்தோடு தன் மகளது கண்களுக்கு மயிலிறகால் மையிடவா எனவும், கால்களுக்கு மணிக் கொலுசு இடவா எனவும் வேண்டி நிற்கின்றார் தந்தை. மேலும் இந்தப் பாடலில் வரும்,

செல்லமகள் அழுகைப் போல்
ஒரு சில்லென்ற சங்கீதம் கேட்டதில்லை
பொன்மகளின் புன்னகைப் போல்
யுகப் பூக்களுக்குப் புன்னகைக்கத்
தெரியவில்லை
என் பிள்ளை எட்டு வைத்த நடையைப் போல
எந்த இலக்கண கவிதையும் நடந்ததில்லை...

ஆகிய வரிகளும் மகள் மீது தந்தை கொண்ட அன்பினை எடுத்துரைக்கின்றது. ஆம், தன் செல்ல மகள் அழகைப் போல இனிய சங்கீதம் வேறில்லை எனவும், தன் மகளின் புன்னகைக்கு மலர்களும் தோற்று விடும் எனவும், தன் மகளது நடையைப் போல எந்த இலக்கண கவிதையும் நடந்ததில்லை எனவும் தன் மகள் மீது கொண்ட பாசம் பொங்கிடவே பாடி மகிழ்ந்திடும் தந்தையின் அன்பின் ஆழம் தான் என்னே.

என்னை அறிந்தால்- உனக்கென்ன வேண்டும் சொல்லு...

நடிகர் அஜித் நடித்த திரைப்படம் என்னை அறிந்தால். இத் திரைப்பட த்தில் நடித்திருந்த பெண் குழந்தையைத் தன் மகள் போலவே அன்பு காட்டி வளர்க்கின்றார் அஜித். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் தன் மகள் போல அன்பு காட்டும் குழந்தை யுடன் உலகின் பல இடங்களையும் சுற்றி வருகின்றார். அந்தச் சமயம் இடம் பெறும் பாடலே இது வாகும்.

உனக்கென்ன வேணும்
சொல்லு உலகத்தை
காட்டச் சொல்லு
புது இடம் புது மேகம் தேடி
போவோமே
பிடித்ததை வாங்கச்
சொல்லு வெறுப்பதை
நீங்கச் சொல்லு புது
வெள்ளம்
புது ஆறு நீந்திப் பார்ப்
போமே.....

ஆம். தன் மகளிடம் வேண்டுவதை தன்னிடம் கூறும் படியும், புது இடங்கள் பலவற்றை சுற்றிப் பார்ப்போம் எனவும் அன்புருக கூறி நிற்கின்ற தந்தையின் பாசத்தை காண முடிகின்றது.

தங்க மீன்கள்
ஆனந்த யாழை மீட்டுகின்றாய்...

நடிகர் ராம் பாசமான தந்தையாக நடிக்க, பேபி சாதனா மகளாக நடித்த திரைப்படம் தங்கமீன்கள். இந்தத் திரைப்படத்தில் தந்தை மகள் மீது கொண்ட அதீத அன்பினைப் புலப்ப டுத்தும் அழகிய பாடல் ஒன்று இடம்பெற் றுள்ளது. ஆம். மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டுமே தெரியும் முத்தம் காமத்தில் சேர்ந்ததில்லை என்று எனக் கூறுகின்றார் தந்தை. பாடலுக்கு செல்வோமா,

ஆனந்த யாழை மீட்டுகிறாய்
அடி நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்
அன்பெனும் குடையை நீட்டுகிறாய்
அதில் ஆயிரம் மழை துளி கூட்டுகிறாய்.....

ஆகா, தந்தை மகள் மீது கொண்ட அன்பினை வார்த்தைகளால் பாடியுள்ளமை இன்புறத் தக்கதே.

பாசம் எனும் படகில் மிதந்திடுவோம் இவ்வாறு பல திரையிசைப் பாடல்கள் தந்தை மற்றும் மகளுக்கு இடையிலான பாச உணர்வினை வெளிப்படுத்தும் பாடல்களாக அமைவுறுகின்றன. ஒரு தந்தை மகள் மீது கொண்ட அன்பும் மகள் தன் தந்தை மீது கொண்ட பாசமும் என்றும் நிலையானதே. அது உள்ளத்தின் ஒரு அழகிய உணர்ச்சிப் பிரவாகம் என்றால் மிகையில்லை. ஆக, நாமும் இத்தகு பாடல்களை முழுமையாக கேண்மையுறுவோம். அன்பின் ஆழமதை உணர்ந்திடுவோம். ■

“எமக்கு தாய், தந்தை என உறவுகள் இருந்தாலும் பெண் பிள்ளைகள் எனும் போது அவர்களது தந்தையர்களின் மனமகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனலாம். அந்தளவிற்கு தம் மகள் மீது தந்தையர் கொண்டிருக்கும் பாசத்தினை எல்லை போட்டுக் கூறிட முடியாது. தம் மகள் மீது உயிராகவும், அளவு கடந்த அன்பாகவும் இருந்து அவளை வளர்த்தெடுப்பார்கள். அது போலவே பெண் பிள்ளைகளுக்கும் தம் அம்மாவைக் காட்டிலும் அப்பாவின் மீதே அதிக அன்பும், விருப்பமும் இருக்கின்றது என்பதும் உண்மையே. இதை பல குடும்பங்களில் கண்கூடாக நம் கண்ணுற முடியும். இவ்வாறு சிறப்புறும் தந்தை மற்றும் மகளுக்கு இடையிலான பாசம் எனும் உணர்வின் ஊற்றாக பொலிவுறும் ஒரு சில திரையிசைப் பாடல்களை இங்கு கண்ணுறுதல் சிறப்பாகும்.”

நல்லவற்றை விட்டுச் செல்லுங்கள்

எமது சின்னச்சின்ன செயல்பாடுகள்கூட தூய்மையாக அமைந்துவிட்டால், சாவைத் தாண்டியும் நாம் அடையாளப்படுத்தப்படுவோம். சாவுக்குப் பின்னரும் அவை எம்மைக் காப்பாற்றக்கூடும்.

ஒருவர் சாவடைந்து விட்டால் உலகத்துடனான அவருடைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விடும் என்பது உண்மை. ஆயினும் அவர் விட்டுச்செல்லும் சுவடுகள், அவருடைய மறைவுக்குப் பின்னரும் உலகில் இருந்துகொண்டே இருக்கும். அவை நல்ல சுவடுகளாக இருக்கலாம், அல்லது தீயவையாக இருக்கலாம்.

எனவே, வாழும் காலத்திலேயே நல்ல அடையாளங்களை விட்டுச்செல்லும் வண்ணம் வாழ்வை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

அனைத்துச்செயல்களையும் இறைவன் பதிவு செய்துகொண்டே இருக்கின்றான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆயினும் நாம் விட்டுச் செல்லும் சுவடுகளைக்கூட இம்மி பிசகாமல் பதிவு செய்கிறான் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறைவன் கூறுகின்றான்: 'திண்ணமாக, நாமே சாவடைந்தவர்களை ஒரு நாள் உயிர்ப்பிப்போம். அவர்கள் செய்தவற்றையும் நாம் குறித்துக்கொண்டே இருக்கின்றோம். அவர்கள் விட்டுச்சென்ற சுவடுகளையும் பதிவு செய்து கொண்டிருக்கின்றோம். மேலும், நாம் ஒவ்வொன்றையும் ஒரு தெளிவான பதிவேட்டில் கணக்கிட்டுக் குறித்து வைத்துள்ளோம்'. (திருக்குர்ஆன் 36:12)

இறைவனின் மன்னிப்பையும், மறுமை வெற்றியையும் பெறுவதற்கு சிலபோது நாம் விட்டுச்செல்லும் நல்ல சுவடுகள்கூட நமக்கு துணை நிற்கலாம். ஆம், நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர் எமது தர்மத்தை உண்டவர் நமது இழப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் விட்டுச்செல்லும் சுவடுகள் இப்படித்தான் இருக்க வேண்டும். நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர், நமது வார்த்தைகளால் ஆறுதல் அடைந்தவர் நமது இழப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். 'நம்மை போன்று ஆறுதல் வார்த்தைகள் கூறயாரும் இல்லையே' என்று அவர் ஆதங்கப்பட வேண்டும்.

நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர், நம்மால் நல்வழி பெற்றவர் நமது இழப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர், நமது நல்ல நடத்தையால் கவரப்பட்டவர்கள் நமது இழப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் விட்டுச்செல்லும் சுவடுகள் இப்படித்தான் இருக்க வேண்டும். இந்த சுவடுகள்தான் நமது இறைவனை, மன்னிக்கும் இறைவனாக எமக்குப் பெற்றுத்தரும். ■



ஆசுகவி அன்புடீனின் பொன்விழா நிகழ்வு!

50 வருட இலக்கியப் பயண சிறப்பு மலரும் வெளியீடு

"வாழும்போதே வாழ்த்துவோம்" என்பதற்கொப்ப நாடறிந்த எழுத்தாளர் கவிஞர் மூத்த இலக்கியவாதி கலாபூஷணம் ஆசுகவி அன்புடீனுக்குத் தென்கிழக்குப் பிரதேசத்தில் பெருவிழா ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆசுகவி அன்புடீனின் ஐம்பது வருட இலக்கியப் பணியைப் பாராட்டி மதிப்புறுத்தும் வண்ணம் தென்கிழக்கின் முக்கிய பிரதேசமான அட்டாளைச்சேனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருவிழாவாக இந்தப் பொன்விழா நடத்தப்பட்டது. இலக்கியப் பொன்விழா எனும் மகுடத்துடன் அட்டாளைச்சேனை ஆசுகவி பொன்விழா மன்றம் ஏற்பாடு செய்த விழா அட்டாளைச்சேனை மீனோடைக் கட்டு அல்-ஷக்கீ வரவேற்பு மண்டபத்தில் மக்கள் நிறைந்த விழாவாக நடைபெற்றது.

சிற்பம் செதுக்கிய சிற்பி மலர் வெளியிடப்பட்டது

பொன்விழா மன்றத் தலைவரும் ஓய்வுபெற்ற இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தருமான எம்.எிராஜ் அகமட் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவின் சிறப்பு அம்சமாக ஆசுகவி அன்புடீனின் 50 வருட இலக்கியப் பயணத்தைச் சித்தரிக்கும் வகையில் "சிற்பம் செதுக்கிய சிற்பி" எனும் பெயரிலான சிறப்பு மலரொன்றும் சுமார் 350 பக்கங்களுக்கு மேல் கொண்டதாக வெளியிடப்பட்டது.

விழாவில் நகர திட்டமிடல் நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் முதன்மை அதிதியாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் மதிப்புறு அதிதியாகவும் கலந்துகொண்டனர். அத்துடன் முன்னாள் அமைச்சரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப்சம்சுடீன், வவுனியா அரச அதிபர் ஐ.எம்.ஹனிபா, கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் யு.எல்.ஏ.அஸீஸ், கிழக்கு மாகாண முன்பள்ளி பணியக தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெவ்வை உட்படப் பல உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை இலக்கிய அதிதிகளாக பிரபல எழுத்தாளர் உமாவரதராஜன் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, வாழ்நாள் சாதனையாளர் தமிழ் மணிமானாமக்கீன், தென்னிந்திய கவிஞர், பாடலாசிரியர், எழுத்தாளர் வித்தியாசாகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொன்விழா மன்ற ஆட்சிக் குழு உறுப்பினர் கலாநிதி ஹனிபா எம். இஸ்மயில் விழாவில் வரவேற்புரையும் மன்றத் தலைவர் எம்.ஸிராஸ் அகமத் தலைமையுரையும் செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா முகவுரையும் தலைமை ஆலோசகர் யு.எல்.ஏ.அஸீஸ் ஆசியுரையும் ஆற்றினர்.

மேலும் "சிற்பம் செதுக்கிய சிற்பி" பொன்விழா மலர் வெளியீட்டுரையை எஸ்.எல்.மன்சூரும், நூல் நயப்புரையை ஆய்வாளர் சிராஜ் மஸ்ஹூரும் ஆற்றினார்.

இலக்கிய அதிதிகள் வரிசையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியரும் பிரபல இலக்கியவாதியுமான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

"தென்கிழக்கின் பிரபலங்களான கல்முனையில் நீலாவணன் சண்முகம் சிவலிங்கம், அக்கரைப்பற்றில் அ.ஸ.அப்துஸ்ஸமது, ஏ.இக்பால் போன்றோர் உருவாக்கிய இலக்கிய இயக்கக் குழுக்களுக்கு இணைப்புப்பாலமாக ஆசுகவி அன்புடீன் செயற்பட்டார்.

அவர் நடிகர், கவிஞர், கலைஞர், கட்டுரையாளர் எனப் பரிமாணங்கள் பெற்றவர். நல்ல இலக்கிய விமர்சகருமாவார். அந்த நாள்களில் இடதுசாரிபோக்குகள் கொண்ட பேராசிரியர்கள், எழுத்தாளர்களுடன தொடர்புள்ளவராகத் திகழ்ந்த அன்புடீன் தம் முஸ்லிம் எனும் அடையாளத்தை ஒருபோதும் இழக்க விரும்பவில்லை.

இத்தகையவர்களை எதிர்காலத்திலும் பாராட்டி மதிப்புறுத்த நாம் ஒரு இயக்கமாக இயங்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். அமைச்சர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் அதாவுல்லா உட்பட விழாவில் உரையாற்றிய மற்றும் பலரும் ஆசுகவி அன்புடீனின் 50 வருட இலக்கியப் பணியை வெகுவாகப் பாராட்டி உரையாற்றினர்.

விழாவில் பொன்னாடைகள் போர்த்தியும் பொற்கிளி வழங்கியும் ஆசுகவி அன்புடீன் மதிப்புறுத்தப்பட்டார்.

வாழும்போதே வாழ்த்தி நிற்கிறது தென்கிழக்கு. (ம-30)

உறவுகள், தான் விரும்பாத் தியாகி நாடக ஆற்றுகைகள் வவுனியாவில்!

குமுதன்

தேசியகலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் நாடக ஆற்றுகை நிகழ்வு கடந்த ஞாயிற்றுகிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துரு மற்றும் நெறியாழ்கையில் உருவான 'உறவுகள்' நாடகமும், ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன்செக்கோவால் எழுதப்பட்டு குழந்தை ம. சண்முகலிங்கத்தால் மொழிபெயர்புச் செய்யப்பட்டு க.ரதிதரனால் நெறியாள்கை செய்யப்பட்ட "தான் விரும்பாத் தியாகி" ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

அரங்கு நிறைந்திருந்த ரசிகர்களிற்கு நல் விருந்து அளித்தமை போன்று உடலசைவுகள், வசனம், காட்சி அமைப்பு, ஒப்பனைகள், மூலம் இன்புறச் செய்திருந்தன பாத்திரப்படைப்புகள். பாத்திரங்கள் மூலமே கதை சொல்லப்பட வேண்டும் என்ற நாடகப் பண்பை நீரூபித்து சென்றிருந்தன அவை. போதை, காதல், வெளி நாட்டுபணம், அவற்றால் ஏற்படுகின்ற குடும்ப உறவுச் சிக்கல்கள், அதன் விளைவுகளை சிறுவர்களும் புரியும்படியாக கதைக்கரு உருவாக்கபட்டிருந்தது.

நாடகம் என்றாலே தொலைகாட்சியில் பார்க்கப்படும் மெகாதொடர்கள் மட்டுமே தற்போதைய தலைமுறைக்கு நினைவு வருகின்ற நிலையில் அனைத்திற்கும் முன்னோடியானது மேடை நாடகமே என்பதை அரங்கு நிறைந்த கரகோசங்களுடன் முரசறைந்து சொல்லியிருந்தன இரு நாடகங்களும்.



நஞ்சுண்ட நிலவு

கவிதை நூல் வெளியீடு

இலக்கியன் முர்ஷித் எழுதிய 'நஞ்சுண்ட நிலவு' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அல்ஹாஜ் கலா பூஷணம் எஸ். அஹமது தலைமையில் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் அமைச்சர் அல்ஹாஜ் ரிசாட் பதியுதீன் கலந்துகொண்டதோடு, மதிப்புறு அதிதிகளாக இராஜாங்க அமைச்சர் அமீர் அலி, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், அல்ஹாஜ் பஷீர் சேகுதாவுத், கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மருத்துவமும் மனிதநேயமும் இணைந்த மனிதருள் மாணிக்கம் அமரர் சிவராசா!

பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இறந்தே யாக வேண்டும் என்பது இயற்கை நியதி. ஆனால் பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடைப்பட்டு வாழ்ந்த காலப்பகுதியில் அவன் எவ்வாறு வாழ்ந்தான் என்று உலகத்தின் கண்கள் எடைபோடும். தனது குடும்பத்தையும் மேம்படுத்தி சமூகத்துக்கும் நற்செயல்கள் புரிந்தால் உலகம் அவனை வணக்கத்துக்குரியவனாக உள்வாங்கும். இத்தகைய மனிதனே அமரர் மருத்துவர் சிவராசா. அவர் இடர்பட்ட தமிழ் சமூகத்துக்கு ஆற்றிய பலநற்செயல்களில் இரண்டு என் கண்களின் முன் வந்து நிற்கின்றன. அவர் அரச மருத்துவ சேவையிலிருந்து இளைப்பாறி 'பிறைவேற் பிறக்டிஸ்' என்ற பதம் இடப்பட்ட தனியார் மருத்துவ சேவையை வழங்கி தனது பணப் பெட்டகத்தை நிரப்பியிருக்கலாம். ஆனால் அவற்றைப் புறந்தள்ளி மனிதநேயச் செயற்பாடுகள்- செவிப்புலன் இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள் என அழைக்கப்படும் சங்கங்களில் அவரின் நற்கருணை நிறைந்த சேவையைக் கருத்திற் கொண்டுதலைவராகமகுடம்சூட்டப்பட்டார். தமிழ் மாணவர்களிடையே மருத்துவக் கல்வி மழுங்கடிக்கப்படாமல் மருத்துவக் கல்வியை புகட்டிய பெருமைக்குரியவராகின்றார். அடுத்ததாக 'ஆபத்தில்அறி நண்பனை' என்பார்கள். அதுபோல் போர் மேகங்கள் சூழ்ந்த வடக்கு கிழக்கில் அவசர கால நிலமை ஊடரங்கு உத்தரவு, பாதுகாப்புக் கெடுபிடி அவற்றையெல்லாம் மீறி நோயின் தாக்கத்தால் வீட்டிலே துடிதுடித்துக் கொண்டிருந்த நோயாளி எந்த மூலை முடுக்குகளில் இருந்தாலும் நோயாளர் காவு வண்டிகளை அனுப்பி அவசர வைத்திய உதவி கிடைக்க வழிவகுத்த பெருமைக்குரியவராகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தியாகி திலீபனின் உடல் மருத்துவப் படிப்புக்காக கையளிக்கப்பட்டபோது அமரர் மருத்துவர் சிவராசாவே மருத்துவ பீடத்தின் சார்பாகப் பொறுப்பேற்றார் என்று தெரியவந்தது. அவருடைய இறப்பு எமக்கு ஒரு சிறந்த படிப்பினையை உண்டாக்கிய செய்தியாக அமைந்தது. இல்லறத்துடன் நல்லறம் இணைந்திருத்தல் வேண்டும். துன்பத்தில் அல்லலுறும் மனிதர்களுக்கு நேசக்கரம் நீட்டு மனிதம் நிறைந்த செயற்பாட்டை முன்னிலைப்படுத்துதல் வேண்டும். அன்றேல் தீயுடன் சங்கமிக்கும் எமது வாழ்ந்த சரித்திரமும் எரிந்துவிடும். ஆனால் சமூக மேம்பாட்டுக்கு நற்காரியங்கள் செய்பவர்கள் உடல் தீயில் சங்கமித்தாலும் சாம்பலிலே உயிர்தெழும் பீனிக்ஸ் பறவைகள் போல் அவருடைய நற்செயல்கள் உயிர்த்தெழுந்து நிற்கும்.

சு. தர்மலிங்கம்

பூவரசி பதிப்பக ஈழவாணியின் காப்பு நூல் வெளியீடு

தமிழ்நாடு பூவரசி வெளியீடுகள் பதிப்பக நிறுவனம் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளையுடன் இணைந்து நடத்துகின்ற ஈழவாணியின் காப்பு எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு, சகவாழ்வு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் முதன்மை அதிதியாக கலந்து கொள்ளும் இந்த விழாவுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் தே. செந்தில்வேலவர் தலைமை தாங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதிவான்

குடத்தனையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை நாகலிங்க முதலியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா புலேந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பொ. சிவகுமார் முன்னிலையில் பதவியேற்றார்.

1982ஆம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்து 1987ஆம் ஆண்டு கிராம சேவை அலுவலராக இணைந்தார். 34 வருட அரச சேவையை பூர்த்தி செய்த இவர் 2016ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இவர் தனது சேவைக்காலத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச்சங்க செயலராகவும், நல்லிணக்க குழு உறுப்பினராகவும், பருத்தித்துறை சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவராகவும், சக வாழ்வு சங்க அங்கத்தவராகவும், பருத்தித்துறை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராகவும், பருத்தித்துறை நகர அபிவிருத்தி குழு செயற்பாட்டு குழு உறுப்பினராகவும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்க நிர்வாக உறுப்பினராகவும், பருத்தித்துறை மத்திய மருந்தக ஊழியர் அபிவிருத்தி குழு செயலராகவும் செயல்பட்டுவருகின்றார். (ம-173)

சித்திரவதைக்கு எதிரான குழு முகாம்களையும் ஆராயலாம்

கொழும்பு, ஏப்.3

இலங்கை வந்துள்ள சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐ.நா. உப குழு இங்குள்ள இராணுவ முகாம்களுக்கு நுழைந்து பார்வையிட அனுமதி கோரலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் படைத் தரப்பினர் மீது சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவரும் நிலையில் அந்தக் குழு இராணுவ முகாம்களைப் பார்வையிட முயற்சிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குழு எதிர்வரும் 12ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. ஐ.நாவின் நிபுணர்களைக் கொண்டுள்ள இந்தக் குழு, பொலிஸ் தடுப்பு நிலையங்கள், சித்திரவதைக் கூடங்களாக இருந்த இராணுவ மற்றும் கடற்படை முகாம்களைச் சென்று பார்க்க வேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆயினும் இந்தக் குழு நுழைந்து பார்வையிடக் கோரவுள்ள இடங்கள் தொடர்பாக கருத்து வெளியிடுவதற்கு, சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா உப குழுவின் மனித உரிமைகள் அதிகாரி ஆர்மென் அவெரிஸ்யான் மறுப்பு தெரிவித்துள்ளார்.

"இன்னமும் பயணம் தொடங்கவில்லை. இந்தப் பயணம் தொடர்பாக எந்த தகவலையும் வழங்கக் கூடிய நிலையில் நான் இல்லை. சித்திரவதைகளுக்கு எதிரான உப குழுவின் பணி இரகசியத் தன்மைக் கொள்கையின் அடிப்படையில் வழி நடத்தப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், நீதித்துறை ஆணைக்குட்பட்ட அனைத்து இடங்களுக்கு ஐ.நா குழுவை எந்தவொரு அரசும் அனுமதிக்க வேண்டும் என்பது விதிமுறையாகும் என்றும் ஆர்மென் அவெரிஸ்யான் கூறியுள்ளார். (எ)

கூட்டமைப்பின்...

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி என்ற பெயரில் பல கோடி ரூபாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகையாகக் கொடுத்து அவர்களைத் தம் பக்கம் வளைத்து விட்டார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. ஆனாலும் எதிர்வரும் 5ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தை நாம் தோற்கடித்தே தீருவோம் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தனர்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான சஜித் பிரேமதாச, ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க ஆகியோரே கூட்டாக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இல்லாதபோது நடைபெற்ற குழு நிலை விவாத வாக்கெடுப்பில் சம்பிக்க ரணவக்க, வஜிர அபேவர்த்தன ஆகியோரிடம் உள்ள அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைத் தோற்கடித்த மமதையில் மகிந்த அணி உள்ளது. வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பைத் தோற்கடிப்போம் என்றும், அரசைக் கவிப்போம் என்றும் மகிந்த அணி சூளுரைக்கின்றது.

அவர்களின் சூளுரைகள் அனைத்தும் வெறும் வாய்ப்பேச்சுகளே. செயல் வடிவில் நிறைவேற நாம் ஒருபோதும் அனுமதிக்கோம். எம்மை எவராலும் வீழ்த்த முடியாது. நாட்டு மக்கள் என்றைக்கும் எமது பக்கமே இருப்பார்கள். மீண்டும் சர்வாதிகார ஆட்சி அமைய எமது மக்கள் விரும்ப மாட்டார்கள்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியில் இருந்து எமது அரசை வீழ்த்த மகிந்த அணி பல சதித் திட்டங்களைத் தீட்டுகின்றனர். அதை நாம் ஓரணியில் நின்று முறியடித்து வருகின்றோம். எம்மை வீழ்த்தும் சதி முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்காது என்பதை மகிந்த அணிக்கு நாம் தெளிவுபடுத்துகின்றோம்.

இயலுமானால் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை (இறுதி வாக்கெடுப்பு)த் தோற்கடித்துக் காட்டுங்கள் என்று மகிந்த அணியினரிடம் நாம் பகிரங்கமாகவே சவால் விடுகின்றோம்.

கூட்டமைப்பு ஆதரவு

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் ஆதரவாக வாக்களிப்பர். கூட்டமைப்பின் தலைமை இது தொடர்பாக எம்மிடம் உறுதியளித்துள்ளது - என்றனர். (எ-22)

கூட்டமைப்பைச்...

யடுத்து இன்று அரச தலைவரைச் சந்திப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும், சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகவும் அரச தலைவரை இன்று (நேற்று) சந்திக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஆயினும் சந்திப்புக்கான நேரத்தை அரச தலைவர் ஒதுக்காத காரணத்தால் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை என்று அறியமுடிந்தது.

இன்று மாலை 3 மணியளவில் வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான சிறப்பு அரச தலைவர் செயலணிக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்கேற்கவுள்ளது. அந்தக் கூட்டத்தின் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைத் தனித்துச் சந்தித்துப் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்திப்பு நடைபெற்றது. அதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வேலைத் திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (எ-22)

நிர்வாக சேவை...

களத்துறை மாவட்ட மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நளீந்த ஜயதிஸ, நாடாளுமன்றில் நேற்று நடந்த நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு, பொது நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு என்பனவற்றின் மீதான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின்போது இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அரச நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வயதெல்லை 28 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் ஏதேனும் ஒரு பிரச்சினை காரணமாகத் தமது கல்வி நடவடிக்கைகளை முடிக்க முடியாது போன திறமையான மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. அதனால் இந்தப் பரீட்சைக்கான வயதெல்லையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

4 நைஜீரியர்கள்...

சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார், பேசாலைக் கடற்பரப்பில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர். தலைமன்னாரில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் பேசாலை, உதயபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் நைஜீரிய நாட்டவர்கள் 4 பேரையும் இந்தியாவுக்குக் கொண்டு சென்று இறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் நேற்று மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (எ-60)

பயிற்சியில்...

பொ.பாலரஜீவ் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் ஈருருளி ஓட்டத்தில் தேசிய மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றவராவார்.

பாலரஜீவ் அதிகாலை வேளையில் நண்பர்களுடன் இணைந்து ஈருருளிப் பயிற்சியில் ஈடுபடுவது வழமை. நேற்றும் வழமை போன்று அவரும், நண்பர்களும் அதிகாலை 4.45 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து பயிற்சிக்குப் புறப்பட்டுள்ளனர். எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்ட ஈருருளி ஓட்டப் போட்டியை இலக்கு வைத்தே அவர்கள் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

பூநகரி, அறுகம்வெளியை அண்மித்து அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஒருவர் பின் ஒருவராக அவர்கள் பயணித்துக் கொண்டிருந்தனர். நண்பர்கள் முன்னே சென்று கொண்டிருக்க 50 மீற்றர் தூரத்தில் கடைசியாக பாலரஜீவ் ஈருருளியில் சென்று கொண்டிருந்தார்.

முன்னே சென்ற நண்பர்கள் சத்தம் ஒன்றைக் கேட்டுத் திரும்பிச் சென்றபோது பால்ராஜ் கீழே விழுந்திருந்தார். அவர் அவர்களிடம் தண்ணீர், தண்ணீர் என்று கேட்டுள்ளார். அவர் அசாதாரண நிலையில் காணப்பட்டதை அடுத்து அவர் அங்கிருந்து உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

அங்கிருந்து அவர் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுச் சோதனையின்போது, பாலரஜீவின் முதுக்குப்புறமாக வாகனம் ஒன்று ஏறிச் சென்றமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்றும், அதனால் என்பு முறிவுகள் ஏற்பட்டமையும் அவதானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தாம் சத்தம் கேட்டுத் திரும்பியபோது யாழ்ப்பாணம் நோக்கி இரு பட்டா ரக வாகனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன என்று பாலரஜீவின் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-105,9,23)

வவுனியாவை...

மருத்துவமனையின் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

அண்மைக் காலமாக வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்று அதிகம் இனங்காணப்பட்டுள்ளது. எலிக் காய்ச்சல் ஏற்படுதற்கு முக்கிய காரணம் வயல்களில் வேலை செய்வதே. வயல்களில் காணப்படும் எலிகளின் சிறுநீரில் இருந்து இந்தக் காய்ச்சல் வேகமாக மனிதர்களைத் தாக்குகின்றது.

எலிகள் கூடுதலாகக் காணப்படும் இடங்களில் இந்தத் தொற்று அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. வயல்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் வேலை செய்வோர் எலிக் காய்ச்சல் தொடர்பாக எச்சரிக்கையாக இருப்பது மிக அவசியம்.

இவ்வாறான இடங்களில் வேலை செய்பவர்கள் தமது கைகள், கால்களில் காயங்கள் இருந்தால் அது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும். நீளமான பாதணி அணிந்தோ, காலுறை அணிந்தோ வேலை செய்ய வேண்டும். எலிகளின் சிறுநீர் காயங்களில் படாதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கிருமிகள் காயங்கள் ஊடாகவும், கண், வாய் போன்ற மென்மையான தோல் உள்ள இடங்கள் ஊடாகவும் சென்று தொற்றை ஏற்படுத்தும். காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று உடனடியாகப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு 70 ஆண்களும், 20 பெண்களும் எலிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றிருந்தனர். இந்த ஆண்டின் மார்ச் மாதம் வரையில் 23 ஆண்களும், 8 பெண்களும் எலிக் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெற்றுள்ளனர் - என்றார். (எ-110)

வவுனியாவில்...

(வயது-27) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவர் தட்டாங்குளத்தில் இருந்து வவுனியா நோக்கி அதிகாலை 3 மணியளவில் சென்றார் என்றும், நெளுக்குளம் சந்திக்கு அருகில் பற்றைகளுக்குள் மறைந்திருந்த இருவர் இவரை வழிமறித்துத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் இளைஞரின் இரு கால்களிலும், கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாரும், வவுனியா பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

7 வகை...

வாகனத்தை செலுத்துதல், செல்லுபடியாகும் வாகன காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தல், அதிக வேகத்தில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களை வாகன சாரதியாக அமர்த்துதல், செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவித்து வாகனம் செலுத்துதல், வீதியில் இடது பக்கமாக முந்திச் செல்லுதல் போன்ற குற்றங்களுக்கே தண்டத் தொகையாக 25 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான வயதெல்லைக்கும் குறைவானவர்கள் வாகனம் செலுத்துதல், பாதுகாப்பின்றி மற்றும் ஆபத்தான வகையில் அதிக வேகத்தில் வாகனைத்தை செலுத்துதல், அலைபேசி பயன்படுத்தியவாறு வாகனம் செலுத்துதல் போன்ற போக்குவரத்து குற்றங்களுக்கு தண்டத் தொகையை எதிர்காலத்தில் அதிகரிக்க எதிர்ப்பார்த்துள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (த)

வேலை...

செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அண்மையில் ஆலோசனை நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார் என்றும், வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்று கூறி இளையோர்கள் பலரிடம் நிதி மோசடி செய்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவரிடம் பணம் கொடுத்துப் பாதிக்கப்பட்ட ஒருவரால் சில தினங்களுக்கு முன்னர் இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பெருங் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்றும் ஒருவர் இது தொடர்பாக முறைப்பாடு செய்ததை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுச் சந்தேகநபரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யட்டவர் யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணையின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(எ-37,26)

இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடாத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

++++

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

++++

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (ஒ-23)

கபடியில் வென்றது பருத்தித்துறை அணி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கடற்கரைக் கபடிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதியது.

54:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

கடற்கரை கபடி சம்பியன் சண்டிலிப்பாய் வசமானது

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான கடற்கரைக் கபடிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் இடம் பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 67:29 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ஒ.5,422)

பூப்பந்தாட்டாம்
நெல்லியடி மத்திய கல்லூரி வெற்றி

கரணவாய், ஏப். 3

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது மற்றும் 20 வயது ஆண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி சம்பியனானது.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம் பெற்றன. 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலமும் பலப் பரீட்சை நடத்தின. மூன்று தனிநபர் ஆட்டங்களையும், இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட சுற்றுப் போட்டியில் முதல் செற்றை 21:15 என்று நெல்லியடி மத்திய கல்லூரி அணி கைப்பற்ற, அடுத்த செற்றை 21:17 என்று கைப்பற்றி ஆட்டத்தை சமப்படுத்தியது தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய அணி.

தொடர்ந்து 21:14 என்று தனிநபர் ஆட்டத்தையும், 21:10 என்று இரட்டையர் ஆட்டத்தையும் வெற்றி கொண்ட நெல்லியடி மத்திய கல்லூரி அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

20 வயது ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதின. மூன்று தனிநபர் ஆட்டங்களையும், இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட இந்தப் போட்டியில் 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது நெல்லியடி மத்திய கல்லூரி அணி. மூன்றாம் இடத்தை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ஒ.108)

கரவெட்டிப் பிரதேச அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்துக் கோப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

21:19, 21:19 என்ற செற் கணக்கில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ஒ-23)

கடற்கரை கரப்பந்து
வெற்றியைச் சுவீகரித்தது மெதடிஸ்த பெண்கள்

கரவெட்டி, ஏப். 3

20 வயதுப் பெண்களுக்கான வலய மட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வெற்றி பெற்றுள்ளது.

இறுதியாட்டம் வல்வை உதயசூரியன் கடற்கரையில் இடம்பெற்றது.

கடந்த ஆண்டு சம்பியனான உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் முதல் செற்றை 21:18 என்று மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை கைப்பற்றியது. அபாரமாக ஆடிய உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அடுத்த செற்றை 22:20 என்று வெற்றி பெற்று ஆட்டத்தை சமப்படுத்தியது. வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக மூன்றாவது செற்றை 15:13 என்ற புள்ளிகளைப் பெற்று 2:1 என்ற கணக்கில் வெற்றியீட்டியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. வல்வை மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றது. (ஒ.5,108)

ஆண்களுக்கான
கடற்கரை கரப்பந்தாட்டம் கோப்பாய் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்துக் கோப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

21:19, 21:17 என்ற செற் கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ஒ-23)

தாஹீர் சிறப்பாக பந்து வீசினார்

டோனி புகழாரம்

சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு காரணமாக அணித் தலைவர் டோனி காணப்பட்டார்.

இது குறித்து டோனி தெரிவிக்கையில்:

நாங்கள் இணைப்பாட்டத்தை அமைத்து ஓட்டங்களைக் குவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். பனிப் பொழிவு இருக்கும் என்பதை நாங்கள் அறிந்து இருந்தோம்.

கை விரல்களை பயன்படுத்தி பந்து வீசும் ரிஸ்ட் சுழற்பந்து வீச்சாளர்கள் பனி பொழிவு நேரத்தில் பந்து வீசுவது கடினம். ஆனால் லெக்ஸ்பின்னரான இம்ரான் தஹீர் சிறப்பாக பந்து வீசினார். பனி பொழிவு நேரத்தில் ரிஸ்ட் ஸ்பின்னராக அவர் சிறப்பாகச் செயற்பட்டார்.

ஐ.பி.எல். நீண்ட நாள் தொடர் என்பதால் துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் தங்களது ஆட்டத்தை மேம்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன் - என்றார்.

பாண்டியா, ராகுலுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் ஹர்திக் பாண்டியா, லோகேஷ் ராகுல் ஆகியோர் பெண்கள் குறித்து சர்ச்சையான கருத்தை வெளியிட்டமையால் அவர்களை இந்திய கிரிக் கெட்சபை இடைநீக்கம் செய்தது.

பின்னர் இருவர் மீதான இடைநீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டதுடன் தொடர்ந்து விளையாட அனுமதி அளிக்கப்பட்டது. இதற்கிடையில் இருவர் மீதான புகார் குறித்து விசாரணைக்காக இருவரும் நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். போட்டியில் பாண்டியா மும்பை இந்தியன்ஸ் அணிக்காகவும், லோகேஷ் ராகுல் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காகவும் விளையாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

டெல்லியை பந்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப்

12 ஆவது ஐ.பி.எல். தொடரின் 13ஆவது போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் - டெல்லி கப்பிடல்ஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் பஞ்சாப் அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கே.எல். ராகுல், குர்ரன் களமிறங்கினர். இருவரும் 36 ஓட்டங்களுள் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தனர். அணி 150 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகபட்சமாக மில்லர் 43 ஓட்டங்களையும், சர்பாஸ் கான் 39 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் மோரிஸ் 3 இலக்குகளையும், ரபாடா, லமிச்சனே தலா இரண்டு இலக்குகளையும், கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பிரித்வி ஷா, தவான் களமிறங்கினர். அணி எந்தவொரு ஓட்டத்தையும் பெறாத நிலையில் கடந்த போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டு 99 ஓட்டங்களை விளாசிய பிரித்வி ஷா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் பின்வரிசை வீரர்கள் சொதப்பியதால் அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டுமே பெற்று 14 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. அதிகபட்சமாக ரிஷப் பந்த் 39 ஓட்டங்களையும், இங்ரம் 38 ஓட்டங்களையும் தவான் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கர்ரன் 4 இலக்குகளையும், அஸ்வின், மொகமட் சமி தலா இரண்டு இலக்குகளையும், வியோன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் வீரர் சாம் கர்ரன் தெரிவு செய்யப்பட்டார்.

டோனி நேர்மறையாக ஊக்குவிப்பார் - பிராவோ

சென்னை - ராஜஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் சென்னை அணித் தலைவர் டோனி 46 பந்துகளில் 75 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

ராஜஸ்தான் அணி துடுப்பெடுத்தாடிய போது இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் அந்த அணிக்கு 12 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவைப்பட்டது. இந்த நேரத்தில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை வீசுவதற்கு பிராவோவை அணித் தலைவர் டோனி அழைத்தார். பிராவோ வீசிய 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 19 ஓட்டங்கள் கொடுக்கப்பட்டன . இந்த நிலையில் டோனி இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை வீச பிராவோவை அழைத்திருந்தார்.

இது குறித்து பிராவோ தெரிவிக்கையில்:

அணித் தலைவர் டோனியின் ஆற்றலை நான் எடுத்துக் கொள்கிறேன். அவர் எப்போதுமே என்னை நேர்மறையாகவே ஊக்குவிப்பவர். அவருடன் நான் மகிழ்ச்சியாக துடுப்பெடுத்தாடுவேன். அவர் எனது துடுப்பாட்டப் பணியை எளிதாக்கி விடுவார். அவர் எதிரணியை எப்பொழுதும் நெருக்கடிக்குள் வைத்திருப்பார் - என்றார்.

மன்னிப்புக் கேட்ட திமுத் கருணாரத்ன

மதுபோதையில் வாகனத்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர் திமுத் கருணரத்னவை, நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அவர் நீதிமன்றில் முன்னிலையானார். இந்த நிலையில் திமுத் கருணாரத்ன தனது முகப் புத்தகத்தில் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நான் எனது வீட்டை நோக்கி செல்வதற்காக வாகனத்தை செலுத்திக்கொண்டிருந்தவேளை சிறு விபத்தொன்று இடம் பெற்றது.

சிறிய காயங்களுக்கு உள்ளான வாகனத்தின் உரிமையாளரிடம் நான் மன்னிப்பு கோரவேண்டும், அவர் இந்த விடயத்தை என்னுடன் நேரடியாக மிகவும் சுமுகமான முறையில் தீர்த்துக்கொண்டார்.

அவர் மருத்துவமனையில் கண்காணிப்புக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பின்னர் தற்போது மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அவரது நலம் குறித்த எனது தார்மீக அக்கறை குறித்தும் அவர் குறித்து சிறந்த அக்கறை எடுக்கப்படும் எனவும் நான் உறுதியளிக்கின்றேன்.

நான் நீதிமன்றில் முன்னிலையாகி உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றினேன். எனது தரப்பிலிருந்து தேவையான அனைத்து சட்டபூர்வ கடமைகளையும் நான் நிறைவேற்றுவேன்.

எனது நடவடிக்கைகள் முற்றாக இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவருக்குரியவையில்லை என்பதை நான் அறிவேன். நான் இந்த சம்பவத்துக்காக உங்கள் அனைவரிடமும் மன்னிப்பு கோருகின்றேன் - என்றார்.

பஞ்சாப் வீரர் சாம் கர்ரன் 'ஹட்ரிக்' சாதனை



பஞ்சாப் - டெல்லி அணிகளுக்கிடையில் இடம் பெற்ற 13ஆவது போட்டியில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு பஞ்சாப் அணியின் பந்து வீச்சாளர் சாம் கர்ரன் பங்களித்திருந்தார். அவர் 2.2 பந்துப்பரிமாற்றங்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். இதில் 20ஆவது பந்துப்பரிமாற்றத்தை சாம் கர்ரன் வீசினார். தான் வீசிய இரு பந்துகளிலும் ரபாடாவினதும், லாமிசனின் இலக்குகளை யும் கைப்பற்றினார். 18ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் ஓர் இலக்கைக் கைப்பற்றினார். அடுத்து அவர் வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரு இலக்குகளை வீழ்த்தி 'ஹட்ரிக்' சாதனை புரிந்தார்.

இதன் மூலம் ஐ.பி.எல். அரங்கில் 'ஹட்ரிக்' எடுத்த 18 ஆவது வீரர் என்ற பெருமையையும் சாம் கர்ரன் பெற்றார்.

வெள்ளிக்கிழமை
1 கோடி
நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 759 வர்ணம் : ஆரஞ்ச
திகதி : 2019.04.02
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
06 10 14 35 R
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 24,368,888/-
தொலைபேசி : 0112 333 546 / 47 web : www.dlb.lk
உடனடி : 011 4 062 002, 077 105 4894 அல்லது 1919
எனும்போது அனுப்பவும் : DLB<space>LOT<space>No : 1919
தவணைக் குலுக்க அனுப்பிய 0114 825 825 ஐ தொடர்பு கொள்ளவும்.
நீங்கள் நிற்ற முக்கட்டுக்கள் 2019.04.05 ஆம் திகதி வெளிக்கிழமை சீட்டிழுப்பு செய்யுமாதம். வெற்றி பெறும் முக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 951
சீட்டிழுப்பு திகதி 2019.04.01 திங்கட்கிழமை
C 27 56 64 75
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,248,524/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
தவணைமுறை குலுக்க பதிவுக்கு 0114 825 825 ஐ அழைக்கவும்.
ரூக்ட் விறிப்பாத்தில்லை உடனடி அனுப்பு: 011 4 062 002 / 077 105 4894
அனைத்து முக்கட்டுக்களும் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி கனிதா
கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 427
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.04.02
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 119,518,658/-
A 20 29 53 59
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தவணை முறை - 0114 824 824, 0112 333 778
செல்லுபடியாகும் நீங்கள் நிற்ற முக்கட்டுக்கள் 2019.04.05 ஆம் திகதி சீட்டிழுப்பு செய்யுமாதம். வெற்றி பெறும் முக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அது கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 573
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.04.02
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,965,990/-
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
07 12 31 42 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தவணை முறை - 0114 824 824, 0112 333 778
நீங்கள் நிற்ற முக்கட்டுக்கள் நிறைவு சீட்டிழுப்பு செய்யுமாதம். வெற்றி பெறும் முக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.04.2019 வெற்றி வாரம் 2490 வர்ணம் சிவப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள் 17 28 49 54
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
03.04.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது தவணை அனுப்பு 1919

தேவை
P.P.T Express Private LTD
முருகண்டியில் இயங்கிவரும் எமது Ice Cream & Organic Vegetarian Restaurant நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
01. Cashier
02. Accountant
பெண்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு - 077386 6250

வலுப்பெற்றுள்ள ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களான டேவிட் வோர்னர், சிமித் ஆகியோர் ஓராண்டு தடையில் இருந்ததாலும், வேகப்பந்து வீச்சாளர்களான மிட்செல் ஸ்டார்க், ஹசில்வுட் ஆகியோர் காயத்தால் அவதிப்பட்டதாலும் அந்த அணி ஒருநாள் போட்டியில் மிகவும் தடுமாறியது. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நெருங்குவதால் ஆஸ்திரேலியா அணி குறித்து விமர்சகர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த நிலையில்தான் ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ஒருநாள் போட்டிகொண்ட தொடரில் விளையாடியது. இறுதி மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று 3:2 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. அதன்பின் பாகிஸ்தானுக்கு எதிராக ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி ஐந்து போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று அசத்தியது. இந்த நேரத்தில் வோர்னரும் சிமித்தும் அணிக்கு திரும்பியுள்ளனர். காயத்தில் இருந்த மிட்செல் ஸ்டார்க், ஹசில்வுட் ஆகியோரும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

இதனால் இந்தியா, பாகிஸ்தான் தொடரில் விளையாடிய சில வீரர்களுக்கு உலகக் கிண்ணத்தில் ஆஸ்திரேலிய அணியில் இடம் கிடைப்பது கடினமாக இருக்கும். இதுகுறித்து பின்ஞ் தெரிவிக்கையில்;

எங்கள் அணியில் சில வீரர்கள் அதிர்ஷ்டம் இல்லாதவர்களாக இருக்கப் போகிறார்கள். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஒவ்வொரு வீரர்களும் உலகக் கிண்ணத்துக்கான அணியில் இடம்பிடிக்க விரும்புவார்கள். ஆனால், கடினமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளது. ஆஸ்திரேலிய அணிக்காக இதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது. ஏனென்றால், கடந்த ஆறு மாதங்களுக்கு முன் ரசிகர்கள் எங்களை கடுமையாக திட்டிக் கொண்டிருந்தார்கள்- என்றார்.

மரண அறிவித்தல்

வல்லிபுரம் கந்தசாமி



தோற்றம் 23.11.1929 மறைவு 01.04.2019

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி (முன்னாள் அதிபர் - பலாலி ஆசிரியர் கலாசாலை, முன்னாள் யுனெஸ்கோ கணித, விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் - பூட்டான், முன்னாள் பௌதீகவியல், கணித ஆசிரியர் - சயன்ஸ் சென்ரர், முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, அறங்காவலர் அவைத் தலைவர் - கரவை வெல்லனிற் பிள்ளையார் கோவில்) 01.04.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னப்பிள்ளை இணையரின் மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை இணையரின் மருமகனும் காலஞ் சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் மதிதரன் (கனடா), கமலவதனி (மகாத்மா வதிவிடப் பள்ளி மதுரை), சிவாஜினி, கங்காதரன் (கனடியத் தமிழ் வானொலி, தாய் வீடு பத்திரிகை, கனடா), சுபோதினி (ஜேர்மனி), முரளிதரன் (பிரதேச செயலகம், பருத்தித்துறை), கலாநிதி (இங்கிலாந்து), கிரிதரன் (ஆஸ்திரேலியா), உமாதரன் (ஆஸ்திரேலியா), யாழினி (கனடா, முன்னாள் ஆசிரியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்ட்ரா (கனடா) மற்றும் நடேசன் (மகாத்மா வதிவிடப் பள்ளி, மதுரை), ராஜேந்திரம் (ஜேர்மனி), கங்காதேவி (மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை), நிர்மலன் (இங்கிலாந்து), சரண்யா (ஆஸ்திரேலியா), மணிவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவகாமிப்பிள்ளை, வேலாயுதம் மற்றும் செல்வவிநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், சபாநாயகம், பஞ்சபாக்கியம் மற்றும் சரஸ்வதி (மணி), காலஞ்சென்றவர்களான மனோன்மணி (முன்னாள் மகளிர் விடுதிப் பொறுப்பாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை, நெல்லியடி மத்திய கல்லூரி), கணேசநாயகம், மகேஸ்வரி, சிவானந்தநாயகம் (முன்னாள் உப அதிபர் - தமிழ்ப் பிரிவு, றோயல் கல்லூரி, கொழும்பு), செந்திநாயகம் (உற்பத்தி முகாமையாளர் - குண்டன்மால்ஸ், கட்டுநாயக்க) மற்றும் கமலேஸ்வரி (இளைப்பாறிய அதிபர் - வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜிதா, ரஜீவா, கோபின், சஜனிகா, சரண்யன், ஆருஷன், அகநிலா, தமிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2019) வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மில்லியந்தோட்டம், சாமியன் அரசடி, கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீடு 021 226 4657, முரளி 077 477 6619,
கங்கா +1416 832 0929, நிர்மலன் +44 7713 911905

தகவல்: குடும்பத்தினர்.

(CS 777/15/17)

Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

06.04.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
06.04.2019 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2021
தொழில் நுட்பம்
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
நடைபெறுகின்றது
வினாத்தாள் வகுப்புக்கள்
A/L 2019
தொழில் நுட்ப பிரிவு மாணவர்களுக்கு
புதிய மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படும்
077 248 7774

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் DELF A1
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம்
0779 789 456
021 221 7781
ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.
ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம்.

மரண அறிவித்தல்

சண்முகம் பொன்னுத்துரை



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுத்துரை நேற்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 221 2076,
077 844 8726

தகவல்: குடும்பத்தினர்.

ஆங்கிலம்
தொழில் புரிவோர் இளைஞர் யுவதிகள் மற்றும் வெளிநாடு செல்வோருக்கான புதிய 3 மாத ஆங்கிலப்பயிற்சிநெறி.
சனி ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 06.04.2019 சனி
பிரிவு 01 : காலை 08-10 பிரிவு 02 : மாலை 03-05
3 மாத காலத்தில் ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
இவ்வாரத்திற்குள் இணைவோருக்கு கட்டணம் ரூபா 3000 மட்டுமே.
SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 222 4282 077 621 4567

VACANCY
ACCOUNTS ASSISTANT NEEDED - FEMALE
REQUIREMENT
A/L COMMERCE
AGE BELOW 26
SEND YOUR CV TO hr@thethinnai.com
THE THINNAI
86, PALALY ROAD, JAFFNA.

PHYSICS
A/L - 2019
- குறுகிய கால வினா விடை வகுப்பு
- முழுப் பாடத்திட்டமும்

ஆசிரியர்: M.ஸ்பெல்மன் (BSc, PGDE)
ஆரம்பம்: 05.04.2019 வெள்ளி
நேரம் : 6.00 p.m
இடம் : M S I (வெலிங்டன் திரையரங்கு சந்தி அருகில்)
BMC LANE JAFFNA TOWN
077 611 6724
- PERSONAL CLASS - GROUP CLASS

ஆக கற்க விரும்பியவர்கள் தொடர்புகொள்ளவும்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.